விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்:பதினாறு — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 04 புதன்கிழமை (16.02.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 058

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## தமிழக மீனவர்கள் அத்துமீறி நுழைவு

# 112 பேரை வளைத்துப்பிடித்தனர்

# வடமராட்சி கடற்தொழிலாளர்கள்

(பருத்தித்துறை)

**வடமராட்சி கடற்பரப்பில் அத்து மீறி 18 இழுவைப் படகுகளில் வந்து மீன்பிடியில் ஈடுபட்ட 112 தமிழக மீனவர்கள் வடமராட்சி மீனவர்களால் பிடிக்கப்பட்டு பருத்தித்துறை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.**

இதில் வடமராட்சி தொண்டைமானாறு முதல் நாகர்கோவில் வரையான கடற்பரப்பிலேயே நேற்று மாலை 3.00 மணிமுதல் இரவு 7.00 மணிவரையில் மேற்படி தமிழக மீனவர்கள் பிடிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

அண்மைக்காலமாக தமிழக மீனவர்கள் (15ஆம் பக்கம் பார்க்க)





## தடுப்புமுகாமில் உள்ள 676 பேரை விடுவிக்க சட்டமா அதிபர் பரிந்துரை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் எனும் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு படைத்தரப்பினரின் தடுப்பு முகாம்களில் உள்ள 676 பேரை விடுதலை செய்வதற்கு அல்லது புனர்வாழ்வு வழங்குவதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் பரிந்துரை செய்துள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் அவசரகாலச்சட்டம் ஆகியவற்றின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களையே விடுதலை செய்யுமாறு அல்லது புனர்வாழ்வுத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளுமாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

பூசா மற்றும் ஓமந்தை தடுப்பு முகாம்களுக்கு அண்மையில் சென்ற சவீந்திர பெர்னாண்டோ தலைமையிலான குழு நடத்திய விசாரணைகளையடுத்தே இந்தப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இக் குழுவில் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ், அரசாங்கத்தின் சட்டவாளர் செத்திய குணசேகர, குமாரரத்தினம், திலான் ரத்னநாயக்க ஆகியோர் (16ஆம் பக்கம் பார்க்க)

## ஜெயபுரத்தில் குண்டுகள் மீட்பு

(பூநகரி)

முறிகண்டி-ஜெயபுரம் வீதியில் 4ஆம் கட்டைப்பகுதியில் வீதியோர பற்றைகளுக்குள் காணப்பட்ட 21 குண்டுகள் கண்ணிவெடியகற்றும் பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மீட்கப்பட்ட குண்டுகள் படையினரின் குண்டுசெயலிழக்கச் செய்யும் பிரிவினரால் நேற்று மாலை 3.30 மணிக்கு வெடிக்க வைக்கப்பட்டது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

முறிகண்டி-ஜெயபுரம் வீதி 4ஆம் கட்டைப் பகுதியில் (16ஆம் பக்கம் பார்க்க)

## புனர்வாழ்வு முகாமில் 352 புலித் தீவிரவாதிகள்

(கொழும்பு)

வவுனியா மற்றும் வெலிகந்தைப் புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் சுமார் 4ஆயிரம் போராளிகளில் 352பேர் அவ்வியக்கத்தின் தீவிர உறுப்பினர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புனர்வாழ்வு முகாம்களில் உள்ள முன்னாள் போராளிகள் ஏ,பி,சி என்று மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழரின் உரிமைக்கு ஆதரவு தனித்தமிழ் அரசுக்கு ஆதரவு இல்லை



### எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு

(ஒஸ்லோ)

தமிழ் மக்களுடைய சட்டரீதியான உரிமைகளுக்கு உறுதியான ஆதரவு உண்டு. ஆனால் தனித்த ஒரு தமிழ் அரசுக்கு சர்வதேச ரீதியில் எவ்வித ஆதரவும் கிடையாது.

இவ்வாறு நோர்வேயின் அமைச்சரும் இலங்கை அரசுக்கும், புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையின் அனுசரணைப் பணியில் விசேட தூதுவராகவும் பணியாற்றிய எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் (16ஆம் பக்கம் பார்க்க)

## தென்சூடானில் நடந்தது போன்று இலங்கையிலும் கருத்துக்கணிப்பு தேவை

### சினங்கொண்ட சிறிலங்கா மறுக்கிறது

(கொழும்பு)

சூடானில் இருந்து தென் சூடான் பிரிந்து செல்வதற்கு கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது போன்று இலங்கையிலும் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

சூடான் நிலைமையும் இலங்கை நிலைமையும் வித்தியாசமானவை என்றும் இலங்கையில் இத்தகைய கருத்துக் கணிப்புக்கு அவசியமில்லை எனவும் முன்னாள் சமாதான செயலகப் பணிப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க கூறியுள்ளார்.

சூடானில் இருந்து தென்சூடான் பிரிந்து செல்வதற்கு கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது போன்று இலங்கையிலும் நடத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும் என பல்வேறு தரப்பினராலும் (15ஆம் பக்கம் பார்க்க)

## மீசாலையில் இளைஞர்கள் கைது

(சாவகச்சேரி)

மீசாலை சோலை அம்மன் கோவில் வீதியில் நேற்று மாலை 5 மணியளவில் சந்தேகத்திற்கிடமான வகையில் வெள்ளை வானில் நடமாடிய இளைஞர் குழுவொன்றை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த குழுவினர் நீண்ட நேரமாக அப்பகுதியில் நடமாடியதை அவதானித்த பொதுமக்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் பொலிஸார் அவர்களைக் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ந-5,29)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Study & Work in UK and Canada
Hurry......for Jan-2011
Intake Get Register Now
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீசா பெறுவதற்கான Sponsorship
பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

# மாடுகளைக் கடத்தும் கும்பல்

(மண்டைதீவு)

மண்டைதீவில் உரிமை கோரப்படாத மாடுகளை கடத்தி அவற்றை இறைச்சிக்கு வெட்டும் நடவடிக்கையில் வெளியார் சிலர் ஈடுபட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு இறைச்சிக்காக வெட்டும் நோக்கில் கால்கள் கட்டப்பட்ட நிலையில் கிடந்த மாடொன்றினை படையினர் கண்டு அதனை மீட்டு காப்பாற்றியுள்ளனர்.

இத்தகைய நடவடிக்கையில் கும்பல் ஒன்று ஈடுபட்டுள்ளதாக அப்பகுதி கிராம சேவையாளர்கள் தெரிவிக்கின்றனர். (ந)

வர்த்தகப் பெருமக்களே...
பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)

# தமிழீழ அரசு அமைப்பதற்கு சர்வதேச ரீதியில் பாரிய முயற்சி

## மேதானந்த தேரர் பிரசங்கம்



(கொழும்பு)

உள்நாட்டில் பலதரப்புக்களின் அனுசரணையுடன் தமிழீழ அரசாங்கத்தை அமைப்பதற்கு சர்வதேச ரீதியில் பாரிய முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாக ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் தலைவருமான எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தில் புதிய பங்குதாரராக ஜே.வி.பியும் இணைந்துள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். நாட்டைத் துண்டாடும் இவ்வாறான நடவடிக்கைகளினால் மீண்டும் பாதிக்கப்படப்போவது அப்பாவி தமிழ் மக்கள் என்பதால் அரசாங்கம் இது குறித்து கருத்தில் கொண்டு முன்னெச்சரிக்கையாக நடந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அண்மைக்காலமாக நாட்டிற்கு எதிராக செயற்படும் இனவாத சக்திகளின் செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளது. ஜே.வி.பி போன்ற கட்சிகள் சமஷ்டி முறைமை தொடர்பாக பேசும் அளவிற்கு மேற்படி இனவாத சக்திகள் தேசிய அரசியலுக்குள் ஊடுருவியுள்ளன. இதனை சாதாரண விடயமாக கருத முடியாது.

சமஷ்டி ஆட்சி முறைமை என்பது இரண்டு அல்லது அதற்கு மேலான வெவ்வேறு அரசாங்கம் உள்ள ஒரு நாட்டில் முன்னெடுக்கப்படும் ஆட்சியாகும். இதனை இலங்கைக்கு அறிமுகம் செய்வது என்பது நாடு துண்டாடப்பட்டு தமிழீழம் உருவாக்கப்படும் என்பதே பொருள்.

எனவே தான் இந்த நாட்டின் மக்களும் தற்போதைய அரசாங்கமும் மேற்படி முறைமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்.

ஒரு அரசாங்கம் உள்ள இலங்கையில், தனி இனத்திற்காக வேறு விசேட வரப்பிரசாதங்களோ, அரசியல் உரிமைகளோ வழங்க முடியாது. இதனை தற்போதைய அரசாங்கம் சிறப்பாக செய்து வருகின்றது என அவர் கூறியுள்ளார். (ந-5)

# மெய்வல்லுநர் போட்டி

(யாழப்பாணம்)

யா/கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் சு.ஸ்ரீகுமரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக நகுலேஸ்வரம் கிராம அலுவலர் செல்வி நாகசுபதினி தம்பிநாயகம், சிறப்பு விருந்தினர்களாக துர்க்காபுரம் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரும் பழைய மாணவியுமான திருமதி மலர்விழி கங்காதரன், திருப்பதி ரெக்ஸ்ரைல்ஸ் உரிமையாளரும் பழைய மாணவனுமாகிய க.மகாலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-2)

# இன்று மின்தடை

(யாழ்ப்பாணம்)

மின்மார்க்கங்களில் கட்டமைப்பு வேலைகள் செய்யும் பொருட்டு இன்று புதன்கிழமை காலை 8.00மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை சங்கானை, பண்டத்தரிப்பு, மாதகல், இளவாலை, சில்லாலை, வட்டுக்கோட்டை, அராலி, சுழிபுரம், மூளாய், காரைநகர், வேலணை, சரவணை, ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, அல்லைப்பிட்டி மற்றும் திருநெல்வேலி-கலாசாலை வீதி, பாற்பண்ணைப் பகுதி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபையின் யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ந)

# வாக்காளர் இடாப்பு விநியோகம் தற்காலிகமாக இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பான கடமைகள் உள்ளூராட்சித் தேர்தல் திணைக்களத்தில் நடைபெறுவதால் வாக்காளர் இடாப்பு விநியோகம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக யாழ்.தேர்தல் திணைக்கள உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இவ் விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் மார்ச் மாதம் 17ஆம் திகதி உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதன் காரணமாக எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதி வரை வாக்காளர் இடாப்பு விநியோகம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்திற்குரிய வாக்காளர் அட்டைகள் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

Diploma in
Digital Video Production
3 Months
Advanced Dip in
Digital Pre-Press
100% செயல்முறைப் பயிற்சி
இலவச பாடநூல்கள்
3 Months
ASIAN COMPUTERS

| | |
|---|---|
| யாழ்.நகர் | : T.P : 021-2225677 |
| நெல்லியடி | : T.P : 021-2262399 |
| சாவகச்சேரி | : T.P : 021-2270267 |

திருமண அழைப்பிதழ்களின் ஆலயம்

BOASCO
ஆயிரங்காலத்துப் பயிர்!
இங்கேயே துளிர்க்கட்டும்!
போஸ்கோ (யாழ். நல்லூர் கோயில் முன்பாக)
No. 610/3(252), Point Pedro Road, Nallur, Jaffna.
Tel: 021 222 0370, E-mail: boasco09@yahoo.com

இன்று முதல் மாபெரும் மலிவு விற்பனை...
நல்லூர்
சரவணா ரெக்ஸ்
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய சாறிகள்
மாபெரும் மலிவு விற்பனை எங்குமே காணாத அதிசிறப்புத் தள்ளுபடி
ஐந்து நாட்கள்
மட்டும் 16.02.2011 தொடக்கம்
20.02.2011 வரை
பஞ்சாபிகள், கொட்டன் சாறிகள், பட்டுசாறிகள்,
சில்க்சாறிகள், பஞ்சாபி துணிகள் ஏராளம்! ஏராளம்!!
அலை அலையாக வாரீர்!
அரிய சந்தர்ப்பம் தவறவிடாதீர்!
காலம்:- 16.02.2011 - 20.02.2011
இடம்:- நல்லூர் பூங்கனிச்சோலைக்கு முன்பாக
நேரம்:- காலை 9.30 மணி முதல் 8 மணி வரை
வாடிக்கையாளர் நலன் கருதி பிரத்தியேகமான இடம்
நல்லூர் பூங்கனிச்சோலைக்கு முன்பாக
சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்

(சி-2456)

# இன்று ஒரு தகவல்

## அஞ்சல் அட்டைகள்

ஒருத்த்ன் தன்னுடைய நண்பனை வழியில் சந்தித்தான். " என்னப்பா... கடிதம் போட்டேனே கிடைத்ததா?" என்றான்.

"ஓ... கிடைத்ததே" என்றான் அவன்.

இவன் உடனே... "ஏண்டா பொய் சொல்கிறாய்?" நான் உனக்கு கடிதமே போடவில்லை. சும்மாதான் கேட்டேன்" என்றான். அவன் பார்த்தான்.

"கடிதம் போட்டேன் என்று நீ பொய் சொல்லும் போது அது கிடைத்து விட்டதென்று நான் பொய் சொல்லக் கூடாதா?"என்றான்.

அஞ்சல் அட்டைகள் எப்படி ஆரம்பமானது தெரியுமா? ஆஸ்திரியா நாட்டில் ஒரு பேராசிரியர் இருந்தார். அவருடைய பெயர் இம்மானுவேல் ஹெர்மன். அவர் ஒருநாள் ஒரு பத்திரிகையில் கட்டுரையொன்றை எழுதினார்.

இது நடந்தது 1869 ஆம் ஆண்டு.

அவர் எழுதிய கட்டுரையில் மக்கள் அதிகம் செலவில்லாமல் ஒருவருக்கொருவர் தகவல் பரிமாறிக் கொள்வது எப்படி? என்பதைப் பற்றி எழுதியிருந்தார். அதற்குச் சில யோசனைகளை அவர் அந்தக் கட்டுரையில் தெரிவித்திருந்தார்.

அந்தக் கட்டுரையை எல்லோரும் படித்தார்கள். இவ்விடயம் அரசாங்கத்தின் கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டது. அவர்களுக்கு இது நல்ல யோசனையாகப்பட்டது

அவ்வளவுதான். உடனே அந்த யோசனையை நடைமுறைக்குக் கொண்டு வந்தார்கள். பேராசிரியர் இம்மானுவேல் ஹெர்மெனின் யோசனைப்படி அச்சடித்த அரச முத்திரையோடு அரசாங்கம் அஞ்சல் அட்டைகளை வெளியிட ஆரம்பித்தது.

1869 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஏழாம் திகதி உலகின் முதல் அஞ்சலட்டை வெளிவந்தது. அதற்குப் பெயர் என்ன தெரியுமா? கரஸ்பொண்டிங் கார்ட்.

அதன்பின் உடனடியாக அமெரிக்காவிலும் இது மாதிரியான கார்ட்களை வெளியிட்டார்களாம். அங்கே இதற்கு என்ன பெயர் தெரியுமா? போஸ்டல் கார்ட். அதன்பின் 1870 இல் இங்கிலாந்திலும் இதை வெளியிட்டார்களாம்.

அதை வெளியிட்ட முதல்நாளன்று என்ன நடந்தது தெரியுமா?

மக்களெல்லாம் ஏதோ நியாயவிலைக் கடையில் நிற்பது போன்று நீண்ட வரிசையில் நின்று இதை வாங்கினார்களாம்.

இன்றைக்கு அஞ்சலகம் இல்லாத இடமே இல்லை. அந்த அளவுக்கு அஞ்சல் போக்குவரத்து மிக முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகிறது.

அன்றைக்கு உள்நாட்டில் ஒருவருக்கொருவர் தகவல் பரிமாற்றம் செய்து கொள்ள மலிவான ஒரு அட்டையை அரசாங்கம் வெளியிடலாம் என்று ஒரு பேராசிரியர் எழுதிய கட்டுரை இன்றைக்கு எந்தளவுக்கு ஆகியிருக்கிறது என்று பார்த்தீர்களா?

ஒருத்தன் தபாற்பெட்டியை கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். அங்கிருந்த இன்னொருத்தன்"என்ன ஆச்சு?"என்று கேட்டார்.

"கொஞ்ச நேரத்துக்கு முன் இந்தப் தபாற்பெட்டியில் ஒரு கார்ட் எழுதிப் போட்டேன். விபரமெல்லாம் நன்றாகத்தான் எழுதியிருந்தேன். ஆனால்,முகவரி எழுத மறந்து விட் டேன்" என்றான்.

உடனே அவன்,"அதற்காகக் கவலைப்படாதே... நான் போட்ட கார்ட்டில் முகவரி எழுதியிருக்கிறேன். ஆனால், விபரம் எழுத மறந்து விட்டேன்..."என்றான்.

"கவலைப்படாதே. கொஞ்சநேரத்தில் தபாற்காரர் வருவார். பெட்டியைத் திறந்ததும் நம்முடைய கடிதத்தை கேட்டு வாங்கிக் கொள்ளலாம்." என்றான் அவன்.

"கொஞ்ச நேரத்துக்கு முன்னர்தான் வந்தவர். கேட்டேன். அதன்பின்தான் மனதுக்கு மிகவும் கஷ்டமாகி விட்டது"என்றான் இவன்.

"ஏன்?"என்று கேட்டான் அவன்.

"இது தபாற்பெட்டியில்லை"என்றான் இவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அரச ஊழியர்களின் விடுமுறைகள் மார்ச் 31 ஆம் திகதி வரை இரத்து

## பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவிப்பு

நிவாரணப் பணிகளை சீராகவும் கிரமமாகவும் துரிதமாகவும் மேற்கொள்வதற்காக சம்பந்தப்பட்ட பிரதேச அரச ஊழியர்களின் விடுமுறைகளை இரத்துசெய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதன்படி, வெள்ளம், மண்சரிவு காரணமாகப் பாதிக்கப்பட்ட மாவட்ட அரச உத்தியோகத்தர்களின் சேவைகள் அத்தியாவசிய சேவைகளாக கருதப்படுகின்றமையால் பாதிக்கப்பட்ட சகல மாவட்டங்களிலும் கடமைபுரியும் அரசாங்க ஊழியர்களின் விடுமுறைகள் யாவும் எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதி வரை இரத்துச் செய்யப்பட்டிருப்பதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கான சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளதுடன் சம்பந்தப்பட்ட மாகாண சகல தலைமை அதிகாரிகளுக்கும் இவ்வறிவுறுத்தல் வழாங்கப்பட்டுள்ளது.

மிக முக்கியமான காரணங்களுக்காக விடுமுறை எடுக்க நேரும் அரச ஊழியர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட காரணங்களை ஒப்புவித்து, சம்பந்துப்பட் அரச நிறுவனத்தின் தலைவர்களின் அனுமதியுடனேயே விடுமுறைகளைப் பெற முடியும் எனவும் அச்சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனர்த்த நிவாரண நடவடிக்கைகளில் எதுவித இடையூறும் ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காகவே மேற்படி தீர்மானத்தை எடுத்துள்ளதாக அமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## ஆங்கில தினப்போட்டி

(அல்வாய்)

வடமராட்சி வலயத்தில் உள்ள மூன்றுகோட்டங்களுக்குமான ஆங்கில தினப்போட்டி எதிர்வரும் மார்ச் மாதம் 5,6ஆம் திகதிகளில் அவ்வவ் கோட்டங்களில் நடைபெறவுள்ளது.

இதில் ஆங்கிலமொழி மூலம் பாவோதல் ,பார்த்து எழுதுதல், ஆக்கச் செயற்பாடு,சொல்வதெழுதல் ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதற்கான விண்ணப்படிவங்களை எதிர்வரும் 23ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் கோட்ட க்கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ஸ்ரீ-3-19)

## பூநகரி நெல்லிற்கு பெரும் கிராக்கி

(பூநகரி)

கேரதீவு- சங்குப்பிட்டிப்பாலம் திறந்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து பூநகரி நெல்லிற்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

பூநகரி நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு யாழ். வர்த்தகர்களும் அரிசி ஆலை உரிமையாளர் களும் போட்டி போடுவதால் ஒரு மூடை நெல் 2 ஆயிரம் ரூபா வரை யில் விற்கப்படுகிறது.

இதேநேரத்தில் அறுவடைக்கு தயாரான காலம் பிந்திய பல நூற்றுக்கணக்கான ஏக்கர் வயல்கள் வெள் ளத்தில் அழிந்துள்ளதுள்ள தால் அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் மேடான காணிகளில் அறுவ டை செய்யப்படும் நெல்லை உடனுக் குடன் சந்தைப்படுத்தும் வாய்ப்பு இப்பகுதிவிவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.தினமும் 10 இற்கு மேற்பட்ட பாரவூர்திகள்நெல் கொள்வனவு நடவடிக்கைகளில் ஈடுபடுவது குறிப்பிடத்தக்கது.(ஸ்ரீ-3-84)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 220 | 200 | 240 | 280 |
| உருளைக்கிழங்கு | 45 | 50 | 70 | 50 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 290 |
| தக்காளி | 120 | 140 | 160 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 55 | 50 | 60 | 50 |
| கோவா | 80 | 100 | 100 | 90 |
| கரட் | 90 | 100 | 150 | 120 |
| பூசணி | 50 | 50 | 70 | 60 |
| புடோல் | 70 | 100 | 120 | 100 |
| வாழைக்காய் | 40 | 60 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 240-280 | 270 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 100 | 70 |
| பாகற்காய் | 110 | 130 | 180 | 140 |
| வெண்டிக்காய் | 100 | 160 | 200 | 150 |
| கருணைக் கிழங்கு | -- | 60 | 80 | 60 |
| பயற்றங்காய் | 150 | 200 | 240 | 230 |
| லீக்ஸ் | 100 | 130 | 160 | 140 |
| பீற்றூட் | -- | 120 | 160 | 130 |
| கறிமிளகாய் | 250 | 250 | 240 | 250 |
| போஞ்சி | 150 | 140 | 180 | 150 |
| கத்தரிதம்புள்ள | -- | 150 | 220 | 160 |
| கீரை - 1 பிடி | 10-15 | 30 | 30 | 25 |
| தேசிக்காய் | 30 | 40 | 80 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 60 | 55 |

## இராசி பலன்

*16.02.2011*
*(மாசி, 4 புதன்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.28 மணிக்கு*
*திரயோதசி மாலை 6.40 மணிவரை*
*புனர்பூசம் முற்பகல் 8.04 மணிவரை*
*இராகுகாலம் 12.33-2.03 மணிவரை*
*சுபநேரம் 5.03-6.33 மணிவரை*
*பிரதோச விரதம்,*
*நபிகள்நாயகம் பிறந்ததினம்*

**மேடம்** பெற்றோரின் ஆதரவால் பெருமை சேரும் நாள், விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், உறவினர் வருகையுண்டு, வாகன சுகமுண்டு.

**இடபம்** நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள்,தன்னம்பிக்கையோடு பணியாற்றி தடைகளை அகற்வீர்கள்,சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மிதுனம்** உங்களின் கருத்துக்கு மதிப்புக் கிடைக்கும்,எதிர்கால வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், மங்கல நிகழ்வுகளில் கலந்து கொண்டு மகிழும் வாய்ப்புண்டு.

**கடகம்** எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்லவிதமாக நடைபெறும்,பயணத்தால் பலன் கிடைக்கும்,பெரிய மனிதரின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிங்கம்** மனப்பதற்றம் அதிகரிக்கும்,காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், மாலைநேரம் மகிழ்ச்சிக்குரிய பயணமொன்று இடம்பெறலாம், தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**கன்னி** விருந்தினரை வரவேற்று வியப்படையும் நாள்,வருங்கால நலன் கருதி புதிய திட்டம் ஒன்றைத் தீட்டுவீர்கள்,பயண வாய்ப்புக்கள் எண்ணியபடியே கைகூடும்.

**துலாம்** அன்பு நண்பர்களின் ஒத்துழைப்புண்டு,தூரதேச செய்தி மகிழ்ச்சியைத் தரும்,ஆரோக்கியமான நாள்,தடைப்பட்ட காரியங்கள் கைகூடும்.

**விருச்சிகம்** கடந்த சில நாட்களாக தடைப்பட்டிருந்த காரியங்கள் துரிதமாக நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும்,மதிப்பும் மரியாதையும் உயரும்.

**தனுசு** காரியவெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள்,தொழிலில் பங்குதாரரிடம் மனஸ்தாபம் ஏற்படலாம்,பிரயாணத்தில் கவனம் தேவை.

**மகரம்** ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும் , விலகியஉறவுகள் மீண்டும் வந்து சேரலாம்,சென்ற இடத் தில் செல்வாக்கு மேலோங்கும், குடும்பத்தில் அந்நியோன்னியம் ஏற்படலாம்.

**கும்பம்** உறவு,பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள்,தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்,தொழில் முன்னேற்றப் பாதையை நோக்கி நகரும்.

**மீனம்** பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரும்,இல்லத்தில் சுப நிகழ்வுகள் இடம்பெறுவதற்கான அறிகுறி தோன்றும்,சொத்துக்களால் சிறு ஆதாயம் கிடைக்கும்.

வளவன்

## வடமாகாண முன்பள்ளிகளுக்கான முகாமைத்துவ திட்ட கால்கோள் விழா

(சாவகச்சேரி)

வடமாகாண முன்பள்ளிகளுக்கான முகாமைத்துவ திட்ட கால் கோள்விழா எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தென்மராட்சி பிரதேசத்தில் இருந்து கல்வி அபிவிருத்திக்கான பிரதிக்கல்விப்பணிப்பாளர், கோட்டக்கல்வி அதிகாரிகள், சமூக அபிவிருத்தி அலுவலர், பொது சுகாதார அதிகாரி, சிறுவர் நன்னடத்தை அதிகாரி, முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்விற்கு தென்மராட்சி பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஶ்ரீ-3-29)

## நூல் வெளியீட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆசிரியர் கே. சுதாகரனின் 'இலங்கை வரலாறு' வினாவிடைகள் நூல் வெளியிட்டு விழா நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை அரங்கில் இந்து நாகரிக ஆசிரியர் சைவப்புலவர் நித்தியதசிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை தலைவர் பேராசிரியர் கலாநிதி பு.புஸ்பரட்ணம், சிறப்பு விருந்தினர்களாக யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர் கலாநிதி க.அருந்தவராஜா, யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சூரியகுமாரி ஜெயவீரசிரங்கம், பொருளியல் கல்லூரி இயக்குநர் எம்.பத்மநாதன், முன்னாள் சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மேலும் நிகழ்வில் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை தலைவர் பேராசிரியர் கலாநிதி ப.புஸ்பரட்ணம் நிகழ்த்த முதற்பிரதியை பொருளியல் கல்லூரி இயக்குநர் எம்.பத்மநாதன் பெற்றுக்கொள்வார். (ஶ்ரீ-9)

## பிரிவுபசாரமும் பாராட்டு விழாவும்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட அதிபர் சங்கம் நடத்தும் பிரிபுபசாரமும் பாராட்டு விழாவும் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலையில் சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட அதிபர் சங்கத் தலைவர் ச.சிவநேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற அதிபர்களான சி.நாகையா, செ.குணபாலசிங்கம், இ.சண்முகநாதன், திருமதி.ச.கனகரத்தினம், த.தர்மஜோதி ஆகியோரும் இடமாற்றம் பெற்ற அதிபர்களான வ.ஶ்ரீகாந்தன், வே.சிவசுந்தரம், அ.சதானந்தன், வண பிதா.ஜேம்ஸ்சிங்கராயர், அருட்சகோதரி செ.அழகேஸ்வரி ஆகியோரும் பதவியுயர்வு பெற்ற அதிபர் பு.சிறிவிக்னேஸ்வரனும் கௌரவிக்கப்படவுள்ளனர். (ஶ்ரீ-9)

## வெடிமருந்து வைத்திருந்த இருவருக்கு விளக்கமறியல்

(கரவெட்டி)

சாவகச்சேரி மந்துவில் பகுதியில் வெடிமருந்து வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இரு சந்தேக நபர்கள் சாவகச்சேரிப் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் 300கிராம் வெடிமருந்தை தம்வசம் வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

இச்சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற பதில் நீதிபதி சொல்லையா கணபதிப்பிள்ளை முன்னிலையில் மன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த பதில் நீதிபதி இரு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஶ்ரீ-3-24)

### சர்வதேச குடிநீர் அமைப்பினால்

## வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரிக்கு நீர் சுத்திகரிக்கும் இயந்திரம் அன்பளிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியின் சர்வதேச குடிநீர் அமைப்பினரால் அமைக்கப்பட்ட நீர் சுத்திகரிக்கும் பாரிய இயந்திரம் ஒன்று கடந்த 24ஆம் திகதி மக்களின் பாவனைக்காக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

178 வருடம் பழைமைவாய்ந்த இக்கல்லூரியில் இவ்வாறானதொரு இயந்திரம் ஒன்று பொருத்தப்பட்டமையானது மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மட்டுமன்றி வட்டுவாழ் மக்களுக்கே கிடைத்த அரிய சந்தர்ப்பமாகும்.

இந்நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தின் மூலம் நீரின் உவர்த்தன்மை இயன்றளவு குறைக்கப்பட்டு நன்னீர் கிடைக்கப்பெறுவதோடு மட்டுமன்றி நீரில் உள்ள கிருமிகள் தொற்று அகற்றப்பட்டு சுத்தமான குடிநீர் கிடைக்கப்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணக்கல்லூரி அதிபர் என்.எ. விமலேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தென்னிந்தியத் திருச்சபை யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தின் பேராயரும் யாழ்ப்பாணக் கல்லூரி ஆளுநர் சபைத் தலைவருமான பேரருட் திரு. அறிவர் டி.எஸ். தியாகராஜா, சர்வதேச குடிநீர் அமைப்பின் தற்போதைய நிர்வாக இயக்குநர் அறிவர் யோசுவா, இவ்வமைப்பைச் சேர்ந்த திருமதி தக்சிரா ஜெயவிக்கிரம, ரிச்சர்ட் கோபிநாத் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (5-ஶ்ரீ-2)




## பாடசாலை மைதான மதிலுக்கான அடிக்கல் நாட்டும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் 530 அடி நீள பாடசாலை மைதான மதில் அத்திவார அடிக்கல் நாட்டும் நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு கல்லூரி அதிபர் தி.சத்திய பாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா , சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் தலைவருமான மு.சந்திரகுமார், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன், ஈ.பி.டி.பி. யின் நல்லூர் பிரதேச அமைப்பாளர் அ.இராவீந் திரதாசன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஶ்ரீ-9)

## கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா கற்கை நெறியில் வளவாளர்களாக் கலந்து கொள்பவர்களை எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறும் கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு டிப்ளோமா கற்கை நெறியின் தென்மராட்சிப் பிரதேச இணைப்பாளர் சு.பாக்கியராஜா அறிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் பேராசிரியர் கே.சின்னத்தம்பி, கலாநிதி ரி.கலாமணி ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர்.

இதில் பங்குபற்றாத வளவாளர்கள் தொடர்ந்து வளவாளர்களாக கற்பித்தலில் இருந்து தவிர்க்கப்படுவார்கள் என்று கலந்துரையாடலை ஒழுக்கமைத்த ஆறுதல் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுந்தரம் டிவகலாலா அறிவித்துள்ளார். (ஶ்ரீ-3-29)







யாழ்.செங்குந்தா சந்தையின் புதிய கட்டடத் தொகுதி அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இதில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா நாடாவெட்டி திறந்து வைப்பதையும் யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோ.பற்குணராசா, யாழ். மாநகர சபை செயலாளர் இ.இரட்ணசிங்கம் ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

# மாசி மாத இராசி பலன்கள்




(மிருகசீர்ஷம் 3, 4 பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள் வரை)

**பதவி மாற்றம் உறுதியாகலாம்**

**எண்ணங்களை எளிதில் செயலாக்க என்ன வழி என்று எப்போதும் யோசித்துக் கொண்டிருக்கும் மிதுன ராசி நேயர்களே!**

குடும்பப் பெருமையைப் பற்றியும், குலப் பெருமையைப் பற்றியும் அடிக்கடி பேசுபவர் கள் நீங்கள். செய்யும் தொழிலையே தெய்வமாகக் கருதுவீர்கள். தீர்க்க முடியாத மனக் குறை ஒன்று உங்கள் மனதின் அடித்தளத்தில் புதைந்திருக்கும். அதையாரிடமும் சொல்ல மாட்டீர்கள். புகழ் மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு புவியில் வாழ்வதுதான் வாழ்க்கை என்பதே உங்கள் சித்தாந்தமாகும்.

உங்களுக்கு இந்த மாசி மாதம் அரசு வழியில் அனுகூலம் கிடைத்து, ஆச்சரியப் படத்தக்க தகவல்கள் வந்து சேரும் மாதமாக அமையப் போகிறது. புத-ஆதித்ய யோகம் இருப்பதால் பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். பெரியோர்கள் யோசனைகளைக் கேட்டு நீங்கள் செய்த காரியங்கள் பிரச்சினை இல்லாமல் முடியும். செவ்வாய் அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் வரை வாகனத்தில் செல்லும் பொழுது கவனம் தேவை.

ஆயினும் மாதத்தின் தொடக்க நாளிலேயே செவ்வாய் கும்பத்திற்கு செல்கிறார். எனவே அச்சமில்லாது வாகனத்தில் பயணம் செய்யலாம். ஜென்ம கேதுவும், ஏழில் ராகு வும் உங்களுக்கு சர்ப்ப தோஷத்தை உருவாக்குவதால், முறையாக சர்ப்ப சாந்திக ளைச் செய்து கொண்டால் முன்னேற்றப் பாதையில் எந்தத் தடையும் ஏற்படாது.

சனியின் வக்ர இயக்கம் உங்களுக்கு நன்மையையே வழங்கும். பலம் பெற்ற அர்த்தாஷ்டமச் சனி இப்பொழுது பலமிழப்பதால், பழையசிக்கல்களில் இருந்து விடுபடு வீர்கள். இக்காலத்தில் சனீஸ்வர வழிபாடு திருப்தி தரும்.

பெப்ரவரி 13ஆம் திகதி கும்பராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார் அஷ்டமத்தில் இதுவரை சஞ்சரித்து, அமைதியை இழக்கவைத்த செவ்வாய் இப்பொழுது ஒன்பதாம் இடத்திற்கு செல்லப்போகிறார். இதன் விளைவாக ஒளிமயமான எதிர்காலம் உருவாகப் போகிறது. வழக்குகளில் வெற்றிகிட்டும். வருங்கால நன்மை கருதி எடுத்த புது முயற்சிகளில் வெற்றி ஏற்படும். இழப்புக்களை ஈடுசெய்ய புதுயுத்திகளை கையாள் வீர்கள்.

பெப்ரவரி 25 ஆம் திகதி மகரராசியில் சுக்ரன் சஞ்சரிப்பது யோகம்தான். 5ஆம் இடத்திற்கு அதிபதி 8ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது நன்மைதருமா என்று நீங்கள் நினைக்க வேண்டாம். 12ற்கு அதிபதியாகவும் சுக்ரன் இருப்பதால், விபரீத ராஜயோகம் செயல்படப்போகிறது. திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். திறமை மிக்கவர்கள் உங்களிற்குப் பின்னணியாக இருந்து உதவிசெய்வர். மாற்று இனத்தவர்கள் உங்கள் கூட்டு முயற்சிக்கு ஒத்துழைப்புச் செய்வர்.

மார்ச் 2ஆம் திகதி உங்கள் ராசிநாதன் புதன் மீனராசியில் நீச்சம் பெறுகிறார். இதன்விளைவாக தொட்ட காரியங்களில் சிறிது தாமதம் ஏற்படலாம். எதையும் ஒருமுறைக்குப் பல முறையோசித்துச் செய்வது நல்லது. கூட்டாளிகளிடம் கூடுதல் விழிப் புணர்ச்சி காட்டினால்தான் லாபம் கைக்கு வந்துசேரும். ஊர்மாற்றச்சிந்தனைகள் மேலோங்கும். வீடுமாற்றங்களும் ஒரு சிலருக்கு நன்மையை வழங்கும்.

இம்மாதம் ராகு-கேதுக்களை வழிபட்டு வருவதோடு பசுவிற்கு அகத்திக்கீரை வழங் குவது நல்லது. பிற ஜீவராசிகளின் பசியைப் பொக்கினால் பிரச்சினைகளில் இருந்து விடுபட வாய்ப்புக்கிடைக்கும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

இம்மாதம் குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். பக்கத்து வீட்டாரின் பகைமாறும். தாய்வழி ஆதரவு திருப்திதரும். உறவினர்கள் பகை மறந்து உங்களுடன் செயல்படுவர். பெப்ரவரி 25ற்கு மேல் சொத்துசம்பந்தப்பட்ட பிரச்சினைகள் நல்ல முடிவுக்குவரும். கணவன் மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். சனிக்கிழமை தோறும். விரதமிருந்து அனுமானை வழிபட்டு வந்தால் சஞ்சலங்கள் தீரும்.




(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயில்யம் முடிய)

**வருமானம் திருப்தி தரும்.**

**“மக்கள் சேவையே மகேசன் சேவை” என்று சொல்லும் கடகராசி நேயர்களே!**

உண்மைச்சம்பவங்களைக் காட்டிலும் கற்பனைச் சம்பவங்களே உங்கள் மனதில் அதிகம் இடம்பிடிக்கும். ஒருசெயலைச் செய்வதற்கு முன்னாள் ஒருசெயலை ஏன்செய்கிறோம், எதற்குச் செய்கிறோம் எப்படிச்செய்கிறோம் என்பதை ஆராய்ந்து பார்ப்பீர்கள். அதுதான் உங்கள் வெற்றியின் ரகசியமும் கூட.

உங்களுக்கு இந்த மாசிமாதம் மகத்தான மாதமாக அமையப்போகிறது. காரணம் உங்கள் ராசிநாதன் மாதத் தொடக்கத்திலேயே உச்சம் பெறுகிறார். உங்கள் ராசிக்கு மூன்றாமிடத்தில் உள்ள சனியை சொந்த வீட்டில் சஞ்சரிக்கும் குரு பார்க்கிறார். எனவே தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொகைவந்துகொண்டே இருக்கும். வெற்றிக்குரிய விதத்தில் நீங்கள் எடுக்கும் நடவடிக்கைகள் அமையும்.

அதேநேரத்தில் 7, 8 இற்கு அதிபதியான சனி வக்ரம் பெற்றிருக்கிறார். எனவே குடும்பத்தில் குழப்பங்கள் அதிகரிக்கலாம். வெளியில் இருக்கும் அளவிற்கு வீட்டுக்குள் நின்மதி இருக்கின்றதா என்பது சந்தேகம் தான். வக்ரச்சனி இழப்புக்களை ஈடுசெய்யும் என்றாலும், வாழ்க்கையில் வசந்தம் வருவதற்கு சில வழிபாடுகளையும் மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக எள் தீபம் ஏற்றிச் சனியை வழிபட்டால் இன்பங்களை எந்நாளும் சந்திக்கலாம்.

அஷ்ரமத்தில் பலம்பெற்ற கிரகங்கள் சஞ்சரிக்கும் பொழுது கூடுதல் விழிப் புணர்ச்சி காட்டவேண்டியது அவசியமாகும். அதிலும் குறிப்பாக செவ்வாய் 8இல் வரும்பொழுது. ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்துதல் வேண்டும். ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்தினால் ஆரோக்கியத்தை சீராக்கிக் கொள்ளலாம். வாகனங்களில் செல்லும் பொழுது விழிப்புணர்ச்சியுடன் சென்றால் ஆபத்துக்களை தவிர்க்க இயலும். செவ்வாய் விரதமும், துவரை தானம் கொடுப்பதன் மூலமும், முருகப்பெருமான் வழிபாட்டாலும் முட்டுக்கட்டைகள் அகலும்.

பெப்ரவரி 25ஆம் திகதி மகர ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக திடீர் ஊர்மாற்றம், இடமாற்றம், வீடுமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். வாழ்க்கைத்துணை வழியே ஏற்பட்ட பிரச்சினைகள் ஒவ்வொன்றாக அகல, விட்டுக்கொடுத்துச் செல்வது தான் நல்லது. புத-ஆதித்ய யோகம் இருப்பதால் கேட்கும் பொழுதெல்லாம் பணம்கிடைத்துக் கொண்டே இருக்கும்.

மார்ச் 2ஆம் திகதி மீனராசியில்

**சிவல்புரி சிங்காரம்**

புதன் சஞ்சரிக்கிறார். புதன் நீச்சம் பெறுவது உங்கள் ராசிக்கு யோகம்தான். 12க்கு அதிபதி நீச்சம் பெறுவதால் பயணங்களால் பயன்கிடைக்கும் பக்குவமாகபேசி நண்பர்களிடம் காரியம் சாதித்துக்கொள்வீர்கள். சகோதரர்கள் உங்கள் எண்ணங்களுக்கு கைகொடுத்து உதவுவர். ஏதேனும் ஒரு உடன்பிறப்புக்கு நீங்கள் உதவி செய்யும் சூழ்நிலை உருவாகலாம்.

இம்மாதம் குருபார்வையை பலப்படுத்த தெட்சிணாமூர்த்தியை வியாழன் தோறும் வழிபட்டு வருவது நல்லது. குளங்களில் துள்ளித்திரியும் மீன்களுக்கு பொறிபோடுவதன் மூலம் அன்னதானம் செய்த பலன்கிடைக்கும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

இம்மாதம் இல்லத்தில் உள்ளவர்களின் ஒத்துழைப்பு கூடுதலாகக் கிடைக்கும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்படும் சுபகாரியங்களை முன்நின்று நடத்தி வைப்பீர்கள். மாதத்தில் மையப் பகுதியில் கணவன் - மனைவி ஒற்றுமை பலப்பட விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. வீட்டில் முன்னோர்வழிபாட்டை முறையாக செய்வதோடு, அம்பிகை வழிபாட்டிலும் ஆர்வங்காட்டுங்கள். உடன் பிறப்புக்கள் திடீர் என குணம்மாறலாம். தொழில் சம்பந்தமாக சேரும் கூட்டாளிகளை யோசித்துச் சேர்த்துக்கொள்வது நல்லது. உத்தி யோகத்தில் இருப்பவர்களுக்கு ஊர்மாற்றங்கள் தவிர்க்க முடியாததாக அமையும்.

(தொடரும்)



உசன் ஐக்கிய நாணய சங்கத்தின் சேவைநலன் பாராட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விழாநாயகர்களான ஓய்வுபெற்ற உதவிக்கல்விப்பணிப்பாளர் க.பேரம்பலம், க.செல்லத்துரை ஆகியோர் மாலை அணிவித்துக் கௌரவிக்கப்படுவதையும். ஐக்கிய நாணய சங்கத் தலைவர் கா.செல்வராசா விழாநாயகர்கள் க.பேரம்பலம், க.செல்லத்துரை ஆகியோருக்கு விருதுவழங்குவதையும் படங்களில் காணலாம்.

# முகாமைத்துவ உதவியாளர் ஆட்சேர்ப்பு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விபரம்

*நேற்றைய தொடர்ச்சி....*

வடமாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவையின் III ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 24ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளது. நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோரின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

### வவுனியா மாவட்டம்

வி.சிவமதி (சாஸ்திரி கூளங்குளம்), ஏ.ஜனனி (கண்டி வீதி),கே.மேரி கான்ஜனா (வைரவபுளியங்குளம்),ஏ.சௌதமினி (தோணிக்கல்), எம்.லாகினி ( தோணிக்கல்), ரி.கலைச்செல்வி (செட்டிக்குளம்), ஏ.பிரியா (வவுனியா தமிழ் மகாவித்தியாலயம்), கே.தர்சன் (தோணிக்கல்), ஜே.ஷ்றீன்ராஜ் (கரப்பங்காடு), எஸ்.நிலுக்கா (மடுக்கந்தை),பி.றோகினி (கனகராயன் குளம் தெற்கு),எஸ்.தினேஸ்குமார் (தோணிக்கல்), எஸ்.கிருஜா (நெலுக்குளம்),கே.காந்தீபன் (பூவரசங்குளம்) கே.நிஷாகரன் (தோணிக்கல்), டபிள்யு- விஜித்ரா (கூமாங் குளம்).

எம்.நிம்சியா (பட்டைக்காடு), எஸ்.பிலோஜினா நான்சி (றம்பைக்குளம்),எஸ்.தர்ஷினி (வைரவ புளியங்குளம்),எஸ்.டனோசனா (கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்), பி.தாட்சாயினி (வைரவபுளியங்குளம்), எஸ்.ஜெயந்தா (கமலங்குளம்), டபிள்யு மடுபாசினி (நவகம), எஸ்.சுகன்யா (2ஆம் குறுக்குத் தெரு), என்.றமேஸ் (கல்வீரங்குளம்), டபிள்யு எம்.என்.என்.வீரக்கோன் (பெரிய உலுக்குளம்), எச்.செல்வாலூட்ஸ் றொஜனி (திருநாவற்குளம்), கே. கீர்த்தனா (செட்டிக்குளம்), கே. சிறீஜெயராம் (வாரிக்குட்டியூர் ).என்.தர்ஷிகா (பூந்தோட்டம்), எஸ்.சுரேந் திரகுமார் (நெலுக்குளம்), எஸ்.சிவகௌரி (பூந்தோட்டம்), எஸ். அசுந்தன் (விநாயகபுரம்), கே.ஜனாசன் (34 ,கதிரேசு வீதி),எஸ்.சோபனா (மருதங்குளம்),எஸ்.அருள்மொழி வேந்தன் (உக்கிளாங்குளம்).

எஸ்.லௌகீத்தா (மடுக் கந்தை),ஜெ.சசிகலா ஜீவந்தி (மடுக்கந்தை), ஏ.பிரசாந்தன் (பண்டாரிக் குளம்), ஜே.ஜவாஸ் (வேப்பங்குளம்), கே.உதயகுமாரி (பூந்தோட் டம்), கே.நடராஜா (கூமாங்குளம்), எஸ்.அகல்யா (3ஆவது மைக்கல், மன்னார் வீதி), எம்.ரத்நாயக்கா (எதவொருனூவேவ), ஜி.ஜல யா (கூமாங்குளம்). ஜி.பிரியதர்சனா (வேப்பங்குளம்),கே.கலைச் செல்வன் (பண்டாரிக்குளம்), ஆர்.நிருசிகா (குருமண்காடு),ஆர்.அபினேஷ் (வைரவ புளியங்குளம்),ரி.சுஜிபன் (வேப்பங்குளம்), ரி.சக்திகமலம் (செட்டிக்குளம்).

### மன்னார் மாவட்டம்

எஸ்.ரி.ரோமிலா அனோஜினி (ஆஸ்பத்திரி வீதி,மன்னார்), ஏ.பிரதாப் (உப்புக்குளம் வடக்கு), ஏ.அஞ்சலின் குரூஸ் (பேசாலை), எம்.ஏ.றிவ்டா (பாலாவி, புத்தளம்), ஏ.தபித் (பாலாவி,புத்தளம்), எம்.மனோகரி (பெரிய மடு), கே.லக்ஷ்மன் (முருங்கன்) ,கே.ஜெயமலர் (திருநெல்வேலி ,யாழ்ப்பாணம்), ஏ.பபியோலா (வட்டக்கண்டல்), எஸ். கொன்சிலா (அடம்பன்), எஸ்.டிசாந்தினி (மடு),பீ.பீ.ஆன்வரேஷ்சொய்சா (வங்காலை), எம்.அருணோசியா (அடம்பன்).

சி.எம். றெனோல்ட் ரோசி (பள்ளிமுனை), எச்.எம். மொஹமட் இம்தியாஸ் (தும்ப பன்னி, புத்தளம்), எம்.மதுவந்தி (சாவகச்சேரி, யாழ்ப்பாணம்), சி.ஆன்ஜெசிக்கா (பேசாலை), எம்.அமலினி சொப்னா (தாழ்வுபாடு), ஆர்.செல்வலக்ஷன் (வட்டக்கண்டல்), எஸ்.நிக்ஷன் (முருங்கன்),எஸ்.மலர்விழி (எழுத்தூர்), பி.பி.றெமி ஜியர் அன்ரன் (வங்காலை), எஸ்.கிருஷாந்திலோகு (சிலாவத்துறை), ஏ.பி.மேரி அல்போன்சா (பள்ளிமுனை).

எம்.கிருஷ்ணசேகர் (தலைமன்னார்), ஏ.நாகஜோதி (தலைமன்னார்), பி.துஷ்யந்தி (அடம்பன்),எம்.ஏ.எம்.நிசாத் (உப்புக்குளம் தெற்கு), என் ஆன்சிந்துஜா (நானாட்டான்), எஸ். அன்ரன் பெரேரா (தாழ்வு பாடு), எஸ்.சாந்தினி (கீரி),எஸ்.மொஹமட் சானூஸ் (புத்தளம்), எஸ்.கஜனி (மூர்வீதி), எம்.எம். நிஷ்ரதுல் அசீலா (தாராபுரம்), எம்.பாத்திமா மின்கா (தில்லையடி),என்.ஹூடஷிப்ரா (பாலாவி, புத் தளம்), ஏ.ஜெ.பிரதீப் ராஜ் (உயிலங்குளம்), டி.டிலானி (விடத்தல்தீவு),எஸ். ஜேன்சரா (பெட்டா)

### கிளிநொச்சி மாவட்டம்

கே. கஜேந்திரவேல் ( பூநகரி), ஜி. டுசீபா (முழங்காவில்), எஸ்.சசிக்குமார் (ஸ்கந்த புரம்), பி. அருணபிரியா (பன்னங்கண்டி), ரி.அனுஷா (திருவையாறு), யு.சிந்துஜா (பல்லவராயன் கட்டு), கே.தர்ஷா (பளை), ரி.கங்கா (பூநகரி), எஸ். மகேந்திரன் (வன்னேரிக்குளம்), பி.பகீரதன் (ஞானிமடம்), ஆர். விதுஷா (உருத்திரபுரம்), ரி. ஜானுகா(ரத்தினபுரம்), ஏ.தமிழரசி (கண்டி வீதி, வவுனியா), ஆர் வித்யா( உருத்திரபுரம்).

கே.ஜனனி(கச்சேரி, யாழ்ப்பாணம்), ஆர். கருணாகரன் (முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்), பி.ஜென்சி (திருநெல்வேலி, யாழ்ப்பாணம்), ஆர். தக்சாயினி (பல்லவராயன் கட்டு), ரி.யசோதரன் (விவேகானந்த நகர்), ரி. பாலச்சந்திரன் (பிரமந்தனாறு), வி.கோபிமுகுந்தன் (கறுக்காய் தீவு, பூநகரி), எஸ். துவாரகா (இராமநாதபுரம்),ரி. தனேஷ் (கோணாவில்). பி.மீனா (இராமநாதபுரம்), எஸ். நிலாகினி (இராமநாதபுரம்), ரி.நிசாந்தன் (திருநகர் வடக்கு), ஆர்.தெய்வபகவான் (உதயநகர் கிழக்கு), ரி. ஜெயதுகிலன் (வவுனியா) கே.கலை தீபன் (கரணவாய் வடக்கு கரவெட்டி), பி.சாரதா (கோண்டாவில் கிழக்கு), ஆர். விமல்ராஜ் (குமரபுரம், பரந்தன்), ஏ.றொபின்சன் (பல்லவராயன் கட்டு, பூநகரி),என். தர்ஷிகாஜினி (இணுவில் கிழக்கு), பி.நிஷாந்தி கிருஷ்ணா (தர்மபுரம், பரந்தன்), ஏ.பாஸ்மதி (முகமாலை, பளை).

### முல்லைத்தீவு மாவட்டம்

பி.பிரஞ்சனா( தட்டுவன், நெடுங்கேணி), கே.விக்னேஸ்வரன்(திருநெல்வேலி), யு.விஜிகலா(அம்பலப்பெருமாள் குளம், அக்கராயன்), வை.சுதாகர் (புதுக்குடியிருப்பு), சி.பி.வேணி மெற்றில்டா(செட்டிக்குளம்), எஸ்.கிருஷாந்தினி(முள்ளியவளை), எம்.கஜீவனா (கொக்குவில் கிழக்கு), எம்.ஆர்.மொஹமட் ஹரீஸ் (மதுரங்குளி).

என்.ஜெயசுதன் (முத்தையன் கட்டு), ஏ.ஜெனிற்றா (செல்வபுரம்),எஸ். உறுமிலா (கைதடி மத்தி), என்.ஜனனி( நெடுங்கேணி), எம். சுஜிதா( பண்டாரிக்குளம்), எஸ். சுகிர்தாசினி (முள்ளியவளை), பி.தர்சாயினி( சுழிபுரம்), பி.அனுஜா(அலம்பில்), ரி.கேசவன் (முள்ளியவளை). கே.தாசிகா (முள்ளியவளை), என். செந் தூரி (வைரவபுளியங்குளம்), ரி. சுலக்ஷன் (வசந்தன் குடியிருப்பு- ஏ ), ஏ.எஸ். மேரி பீறீல் டா (வண்ணான்குளம்), ஏ.நந்தினி (துணுக்காய்), எஸ்.ஜனனி (திருகோணமலை), ரி.சாகித் தியா (முல்லைத்தீவு), வி.மதிவதனன் (ஒட்டு சுட்டான்).

ரி.அம்புஜா ( யாழ்ப்பாணம் ), ரி.சயந்தன் (முள்ளியவளை), எஸ்.அஜித் (பாரதி நகர்), எம்.பிரபு ( அலம்பில்), எம். சரண்யா (கிண்ணியா வீதி, திருகோணமலை), வை. கீர்த்தா (அனிச்சியங்குளம்), என். கவிதா (குரு மண் காடு), எஸ்.சுபராஜ் (செல்வபுரம்), ஆர்.விஷ்ணுநந்தன் (கோட்டை கட்டியகுளம் ), கே. செந்தூரன் (யோகபுரம் ), எஸ்.கஸ்தூரி ( சிவநகர், ஒட்டுசுட்டான் ), ரி.திலீபன் ( முள்ளியவளை)

(முற்றும்)

# இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த பூரண ஆதரவளிக்கப்படும்

(கொழும்பு)

இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த பூரண ஆதரவளிக்கப்படும் என பிரித்தானிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

யுத்தம் இடம்பெற்ற காலத்திலும் அதன் பின்னரும் இலங்கைக்கும் பிரித்தானியாவிற்கும் இடையிலான உறவுகளில் விரிசல் நிலவி வந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கான பிரித்தானியாவின் புதிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரான்கீன் நிய மனக் கடிதத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக் ஷ விடம் நேற்று முன்தினம் சமர்ப்பித்துள்ளார். இதன்போது கருத்து வெளியிட்ட ஜோன் ரான்கீன் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் நிலவிவரும் வரலாற்று ரீதியான உறவுகளைத் தொடர்ந்தும் வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வர்த்தகம் மற்றும் சுற்றுலாத்துறைகளில் கூடுதலான உறவினை எற்படுத்திக் கொள்ள முடியும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இலங்கையின் மீது பிரித்தானியா கடுமையான அழுத்தங்களை பிரயோகித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

அண்மையில் இலங்கையில் ஏற்பட்டமழைவெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மற்றும் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு பிரித் தானிய அரசாங்கம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

# அடையாள அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

கீரிமலை நகுலேஸ்வரா வீதி, கூவில் என்னும் முகவரியைச் சேர்ந்த சிவராசா ஜெகதீஸ்வரன் என்பவருடைய 811444367V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய கைப்பை ஒன்று கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் தகுந்த ஆதாரங்களுடன் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார். (ஸ்ரீ-9)

# இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)



ஊர்காவற்துறை மாவட்ட நீதிமன்றில் தட்டெழுத்தாளராக கடமையாற்றிய திருமதி ஆனந்தராஜா நந்தினிதேவி நீதிச்சேவை ஆணைக்குழுவினால் மன்னார் மாவட்டத்தின் நீதவான் நீதிமன்றத்திற்கு நீதிமன்றப் பதிவாளராக பதவி உயர்வு பெற்று இடமாற்றம் பெற்றுள்ளார்.

(ஸ்ரீ)

# புதிதாக 8 வெளிநாட்டு தூதுவர்கள் நியமனம்

(கொழும்பு)

எட்டு நாடுகளால் புதிதாக நியமிக்கப்பட்ட இலங்கைக்கான தூதுவர்களும் உயர்ஸ்தானிகர்களும் தங்களது நியமனக் கடிதங்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் நேற்று முன்தினம் கையளித்தனர்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் காலையில் இடம்பெற்ற வைபவத்தின் போது இவர்கள் தங்களது நியமனக் கடிதங்களை கையளித்தனர்.

மாலைதீவு, ஐக்கிய இராச்சியம், செக்குடியரசு, பரகுவே, லாவோஸ் , பொஸ்னியா, கஸகஸ்தான் மற்றும் ஸ்லோவேனியா ஆகிய எட்டு நாடுகள் இலங்கைக்கான புதிய இராஜதந்திரிகளை நியமித்துள்ளனர். (ஸ்ரீ-2)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்று

“மனித நேய ஈகையாளன்”

எனும் கௌரவம் பெறும்

திரு.இ.ச.பேரம்பலம் நாகரெத்தினம்



அவர்கள் தொடர்ந்தும் கல்விச் சமூகத்தினருக்கும் நலிவிழந்தோருக்கும் அரும் பெரும் தொண்டாற்ற வேண்டுமென எல்லாம் வல்ல வியாவில் ஐயனாரை வேண்டி நாமும் அவரை வாழ்த்தி மகிழ்கின்றோம்.

வியாவில் ஐயனார் ஆலய தேவஸ்தானம், காரைநகர்.

(C-2454)

# கள்ளிக்காட்டு இதிகாசம்

41



கவிப்பேரரசு வைரமுத்து

"தாயி! ஒண்ணும் பயப்படாத. தைலம் வச்சுத்தாரேன்; பூசுனா சரியாப் போயிடும்."

அவ தனக்குப் பண்ற தகிடுதத்தங்களையெல்லாம் மறந்துட்டுத் தைலம் பண்ணிக் குடுத்தா முருகாயி.

தேங்கா எண்ணெயில சூடத்தக்காச்சி ஒரு தைலம்; வெள்ளப்பூடு மஞ்சளத் தட்டிப் போட்டு வேப்பெண்ணெ காச்சி, ஒரு தைலம். ரெண்டு தைலத்தையும் காய்ச்சி தனித்தனிக் கிண்ணியில எடுத்துக்கிட்டுப் பிள்ளைக்குத் தேய்க்க ஒடிவந்தவள, "தொடாத பிள்ளைய; வச்சிட்டுப் போ; நாந் தேச்சுக்கிறேன்"னு விரட்டிட்டா மின்னலு. அவளும் ஒண்ணும் பேசாம ஒதுங்கிட்டா.

மின்னலு ஏற்கெனவே கொஞ்சம் கூரு கெட்டவ, ஆத்திரம் வேற புடிச்சு ஆட்டுது. தலைக்குத் தேய்க்க வேண்டிய தைலத்தைப் பாதத்துல தேச்சுவிட்டா, பாதத்துல தேய்க்கவேண்டிய தைலத்தைத் தலைக்குத் தேச்சுப்புட்டா.

மருந்த மாத்தித் தேய்ச்சதுல வந்துச்சோ- இல்ல, காய்ச்சல் கடுங்காய்ச்சலாகி வந்துச்சோ தெரியல-பிள்ளைக்கு சன்னி கண்டிருச்சு.

அய்யோ! யப்பே! யாத்தேன்னு அலறி ஊரக் கூட்டிட்டா.

"ஏண்டி கெழடு! மருந்துமாயம் வச்சு எந்தங்கச்சி பிள்ளையக் கொல்லவா பாத்தே"ன்னு நாக்குல நரம்பில்லாமக் கேட்டுட்டா செல்லத்தாயி.

"ஆத்தாளத் தூக்கி விட்டாள்ல... நம்மக் குடும்பத்தையே குழிக்குள்ள தள்ளிட்டு அவளா இருந்த ஆளப் பாக்கிறா"ன்னு மன்னலும் தொணைக்கு வந்துட்டா.

"நீ இங்க இருந்தா மொத்தக் குடும்பத்தையும் முழுங்கிடுவ! வெளங்காத சிறுக்கி வீட்டவிட்டுப் போடி"ன்னு இத்தனை நாளாச் சுத்திவளச்சுச் சொல்ல நெனச்சத மூஞ்சியில முள்ளக்கட்டி அடிச்சமாதிரி நேரடியாவே சொல்லிட்டாளுக.

முருகாயி பாவம்... எங்க போவா? எப்படிப் போவா? இந்தப் பொம்பளைக பண்ற கொடுமைய கூத்த யாருகிட்ட ஒப்பிப்பா?

வகுத்துல சொமக்கிறது எதாயிருந்தாலும் எறங்கிடும் நெஞ்சில சொமக்கிறது எறங்குமா?

ரோசம் மானம் பாக்காம சொல்றதுக்கெல்லாம் தலையாட்டிக்கிட்டு வைராக்கியமாத் தாக்குப்புடிக்கத்தான் நெனச்சா; பொம்பளைக விடலையே.

பேயத்தேவரும் மொக்கராசும் அன்னைக்கு சக்கரவள்ளிக்கெழங்கு ஏத்திக்கிட்டுச் சந்தைக்குப் போயிருந்தாக. அவக வீடு வந்து சேர முன்னப் பின்ன ஆகும்.

முருகாயிக் கெழவிய அன்னைக்கே மூட்டை கட்டிடறதுன்னு அக்கா தங்கச்சிக ரெண்டுபேரும் வரிஞ்சுகட்னாளுக. ஒரு மஞ்சப் பைய எடுத்து அவ உடுத்துமாத்துக்கு வச்சிருந்த துணியெல்லாம் அடச்சு, அவ கையில ஒரு ஏழும் சொச்சமும் திணிச்சு "போ! போயி எங்கயாச்சும் பொழச்சுக்க"ன்னு நல்வாக்கு வேற சொல்லி கழுத்தப் புடிச்சுத் தள்ளாத கொறையா அனுப்பிட்டாளுக.

இருட்டு. காதுக்குள்ள 'உய் உய்'ன்னு புகுந்து உசுரக் கொடையது ஊதக்காத்து. தெருவுல நின்னு வீட்டப்பாக்குறா, இருபது இருபத்திரண்டு வருசமாக் கஞ்சி ஊத்துன வீடு; காவக் காத்த வீடு, இதவிட்டுட்டு நான் எங்க போவேன்? பகல்லயே பாதை தெரியாத பாவிமக நானு; இருட்ல எங்க போவேன்? நெனச்சு அழுது அழுது நெஞ்சுக்குழி காஞ்சுபோனா முருகாயி. இம்புட்டுக் கண்ணீரு எங்கிட்டுத் தான் இருக்குமோ தேகத்துக்குள்ள? கொட்டோ கொட்டுன்னு கொட்டிருச்சு. வீட்ட ஒரு முறை திரும்பிப் பாத்தா. பிறகு தானாப் பேசி நடக்குற கிறுக்கச்சி மாதிரி தெக்கபாத்து நடந்தா. ஊர் எல்லதாண்டி ஒரு குத்துக் கல்லுக்கெடந்துச்சு. அதுல ஒக்காந்துட்டா.

"சந்தைக்குப்போன சாமி வந்தா இந்த வழியாத் தான வரணும்? கஞ்சி ஊத்துன சாமி கால்ல விழுந்து சொல்லிட்டுப் போயிருவோம்."

அழுக்குச் சீலய எடுத்து முக்காடு போட்டுக்கிட்டு ஊதக்காத்துல ஒடம்புல இருக்கிற சூடு வெளிய போயிறக்கூடாதுன்னு இறுக்கிக் கட்டிக்கிட்டு, கட்டிகட்டியா அழுதுகிட்டு முருகாயி எவ்வளவு நேரந்தான் மூக்கச்சிந்துனான்னு தெரியாது.

தலையில ஒரு மூட்டையும் கையில ஒரு பையும் புடுச்சு ஒங்கியடிக்குற ஊதக்காத்து சாச்சிறக் கூடாதுன்னு கொஞ்சமா முதுகுல கூன்போட்டு வளைஞ்சு வளைஞ்சு நடத்துவந்தாரு பேயத்தேவரு; சின்ன மூட்டையத் தூக்கிக்கிட்டு அவரு பின்னாலேயே வந்தான் மொக்கராசு. குத்துக்கல்லுல ஒரு உருவம் உக்காந்திருக்கிறது மட்டும் தெரியுது.

"ஏய் யாரப்பா அது குத்துக்கல்லுல...?"

"நாந்தானய்யா முருகாயி..."

அதிர்ச்சியாகிப் போனார் பேயத்தேவர்.

"ஏன் இந்த நேரத்துல இங்க உக்காந்திருக்கவ?"

கூனிப்போன உடம்பும் உடைந்துபோன கண்ணீரும் நொறுங்கிப் போன வார்த்தைகளுமாய் "தாலியறுத்து வந்த சிறுக்கிக்கு வேலிபோட்ட சாமியில்லையா... சொல்லிட்டுப் போகலாமின்னு ஒக்காந்திருக்கேன்" என்றாள் முருகாயி.

"சொல்லிட்டு போகப் போறியா? எங்க போறவ? யாருபோகச் சொன்னா?"

அவ ஒண்ணும் பேசாம முந்தானப்பந்து சுத்தி வாயில பொத்தி முக்கி முக்கி அழுதா.

"தாத்தா! இது முருகாயி வேலையா இருக்காது. செட்டு சேந்திருக்காளுகள்ல ஆத்தாளும் சின்னாத்தாளும்-அவுக வேலையாத்தான் இருக்கும்."

பேயத்தேவருக்கு எல்லாம் விளங்கிவிட்டது.

தலச்சொமையோட அவ கிட்ட வந்தாரு.

"நீ எங்கயும் போகாதே. எங்கூட வா. நான் முந்திச் செத்தா நீ தூக்கிப்போடணும்; நீ முந்திச் செத்தா நான் தூக்கிப் போடணும்" நெஞ்சுவெடித்து விம்மலோடு விழுந்த பேயத்தேவரின் வார்த்தை கேட்டதும் மஞ்சப்பை தரையில் விழ படாரென்று அவர் காலில் விழுந்து கதறினாள் முருகாயி.

தலையிலிருந்த மூட்டையத் தரையில போட்டுக் கீழ குனிஞ்சு, அவளத் தொட்டுத் தூக்குனாரு பேயத்தேவரு ரெண்டு கையும் நடுங்குது.

அம்பது வருசம் பழக்கத்துல முருகாயி மேல விழுந்த பேயத்தேவரோட முதல் ஸ்பரிசம் அதுதான்.

"ஆத்தாடி! எஞ்சாமி என்னைத் தொட்டுருச்சா? எங்சாமியா என்னத் தொட்டுத் தூக்குனது?" முருகாயி பரவசத்தில் கூனிக்குறுகி சிலிர்த்துச் சில்லிட்டு விம்மி அழுது வெடித்தாள்.

இருட்டில் ஏதோ ஒரு நட்சத்திரம் பூமியில விழுந்ததுமாதிரி இருந்துச்சு; ஊதக்காத்து 'ஓ'ன்னு அலறி அடிச்சு என்னென்னமோ பேசிக்கிட்டுப் போச்சு. பூமி அம்பதுவருசம் பின்னுக்குச் சுத்தறமாதிரி தோணுச்சு.

ஒரு பதினெட்டு-பத்தொன்பது வயசில் தன் கட்டுப்பாட்டை விட்டு மனசு ஒரு தாவு தாவிவிட்டு, 'அய்யயோ! இது நடக்காது' என்று போன வேகத்தில் திரும்பிவந்து கொஞ்சம் பரவசத்தோடும் கொஞ்சம் பரிதவிப்போடும் 'அது ஒரு காலம்' என்று காலமெல்லம் அசைபோட்டுக் கொண்டிருக்குமே... அதுதான் பேயத்தேவருக்கும் முருகாயிக்குமான 'அது'.

"உனக்குள்ளும் அது இருக்கிறது. எனக்குள்ளும் அது இருக்கிறது. நான்கு கண்களுக்குள் மட்டும் மினுக் மினுக் என்று அது மின்னுகிறது. வட்டமிட்டுச் சுற்றிவரவுமில்லை; திட்டமிட்டுச் சொல்லவும் முடியவில்லை. ரெண்டு மனசிலும் கனக்கிறது ஒரே பாரம். இறுதிவரை இறக்கி வைக்கவே இல்லை. கடைசியில் பிரிகிறோம்- இதயங்களுக்குள் குழிவெட்டி பாரங்களைப் புதைத்துக் கொண்டு"

இந்த உறவுக்கு எந்தப் பெயரை வைக்கலாமோ அந்தப் பெயரை வைக்கலாம்-பேயத்தேவருக்கும் முருகாயிக்கும் அனிச்சப்பூவின் அரும்புபோலிருந்த அந்த மெல்லிய உறவுக்கு.

பேயத்தேவருக்குக் கெடா மீச வைக்கணும்னு ஆச. மூக்கு நீளமா-மூஞ்சி அகலமா இருக்கிற ஆள கெடா மீச ஒரு தூக்குத் தூக்கும். அதுவுமில்லாம வீடு வாசல் நெலத்தோட சேத்து மீசையும் ஒரு சொத்தா இல்லையா? என்ன ஒண்ணு! அது பத்திரத்தில வராது. அவ்வளவுதான்.

லேசா ஒரு வெக்கத்தோடயும் பதட்டத்தோடயும் பொடிநடையாப் போயி ஒக்காந்திட்டாரு நாவிதர் வெள்ளையன் வீட்டுல.

வெள்ளையன் தொழில்ல கெட்டிக்கார ஆளு. கள்ளிப்பட்டியில அந்தாளு கத்திக்குத் தலை வணங்காத ஆளே கிடையாது. எந்த மண்டைக்கு எந்த வெட்டு எந்த மூஞ்சிக்கு எந்த மீசைங்கிறதயெல்லாம் வெள்ளையங்கிட்ட விட்டுறணும். தலையக் குடுத்த பெறகு தலையிடக்கூடாது. வெள்ளையன் கிட்டத் தலைய நம்பி ஒப்படைச்சிட்டுக் கண்ணாடி பாக்குறவுக கண்ணாடி பாக்கலாம்; ஒறங்குறவுக ஒறங்கிறலாம். வெள்ளையனாப் பாத்துத் தொழில் முடிச்சு எந்திரிங்கன்னு சொன்னவுடன் எந்திரிக்கலாம். அப்பொறம் அது சொட்டை இது சொட்டைன்னா அந்தாளுக்குக் கோவம் வரும். (வளரும்)



# தபால் மூலம் வாக்களிக்க 3,21,595 பேர் விண்ணப்பம்

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு 3 இலட்சத்து 21ஆயிரத்து 595 பேர் விண்ணப்பித்துள்ளனர். கடந்த காலத் தேர்தல்களுடன் ஒப்பிடுகையில், இந்தத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பித்தோரின் எண் ணிக்கை மிகவும் குறைவானதாகும் என்று தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலுடன் ஒப்பிடுகையில், இந்த எண்ணிக்கை குறைந்துள்ளது. அந்தத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு 4 இலட்சத்து 77 ஆயிரத்து 742 பேர் விண்ணப்பித்திருந்தனர். எதிர்வரும் மார்ச் 17ஆம் திகதி நடைபெறவிருக்கின்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலுக்கான தபால் மூல வாக்குப்பதிவை எதிர்வரும் மார்ச் 8, 9ஆம் திகதிகளில் நடத்துவதற்கு தேர்தல்கள் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்ய அனுமதிக்கப்படமாட்டாது

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

அரசியல் நோக்கங்களுக்காக அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்யக் கூடாது என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நடமாடும் சேவைகள், கண்காட்சிகள், அரச ஆதரவு நிகழ்வுகள் போன்றவற்றை ஏற்பாடு செய்வதனை தவிர்க்குமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பிரசன்னத்துடன் இவ்வாறான நிகழ்வுகள் நடத்தப்படக் கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

பொது நிகழ்வுகளை நடாத்துவது குறித்து அரசாங்க நிறுவனங்களின் தலைவர்களுக்கு தேர்தல் ஆணையாளர் வழிகாட்டி ஒன்றை அனுப்பி வைக்கத் தீர்மானித்துள்ளார்.

அரசியல்வாதிகளின் பிரசார நடவடிக்கைகளுக்கு அரச ஆதரவு நிகழ்வுகள் சந்தர்ப்பமாக அமையும் என அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பணிகளில் அரசாங்க ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டிய காரணத்தினால் இடமாற்றங்கள் வழங்கப்படக்கூடாது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

வாகனங்கள் உள்ளிட்ட அரச சொத்துக்களை வேட்பாளர்கள் பயன்படுத்துவதற்கு அனுமதி அளிக்க முடியாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

## கடற்கொள்ளைகளை தடுக்க

# ஐ.நா.சபையின் உதவியுடன் இலங்கையில் விசேட நீதிமன்றம்

(கொழும்பு)

கடற்கொள்ளைச் சம்பவங்களைத் தடுக்கும் நோக்கில் ஐக்கிய நாடுகள் சபையின் உதவியுடன் இலங்கையில் விசேட நீதிமன்றமொன்று நிறுவப்படவுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக வெளிநாட்டு முக்கியஸ்தர் ஒருவர் அண்மையில் இலங்கையின் அரசாங்க உயர்மட்டத்தினருடன் கலந்துரையாடலை மேற்கொண்டு அரசாங்கத்தின் இணக்கத்தைப் பெற்றிருந்ததுடன் தற்போது அரசாங்கமும் அவ்விடயத்தில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றது.

அண்மைக்காலமாக கடற்கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்து வருவதுடன் இலங்கை மீனவர்கள் பலரும் கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் நடைபெற்ற கடற்கொள்ளைச் சம்பவங்களின் போது அதிரடி நடவடிக்கைகள் மூலம் 118 கொள்ளையர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச சமுத்திரவியல் பணியகத்தின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட கொள்ளைச் சம்பவங்களால் ஏற்பட்டுள்ள பொருளாதார இழப்பு மட்டுமே 7 மில்லியன் டொலர்களுக்கும் அதிகம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவ்வாறான சூழ்நிலையில் கடற்கொள்ளையர்கள் தொடர்பான விசேட நீதிமன்றத்தை இலங்கையில் நிறுவுவதற்கான செலவாக ஐந்து மில்லியன் டொலர்கள் நிதியுதவியை அளிப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை இணங்கியுள்ளது. (ஸ்ரீ-2)

# ஆந்திரா மற்றும் தமிழகத்தில் கைதான 94 இலங்கை மீனவர்கள் விடுதலை

(கொழும்பு)

இந்தியாவின் ஆந்திரா மற்றும் தமிழகத்தில் கைது செய்யப்பட்ட 94 இலங்கை மீனவர்களும் 20 படகுகளும் விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மீன்பிடித்துறை அமைச்சு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய கடற்பரப்பை அத்துமீறியதாக கூறப்பட்டு கடந்த ஆண்டு முதல் கைது செய்யப் பட்டவர்களே இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளனர். இதற்கிடையில் மற்றுமொரு மீன்பிடிப் படகும் அதன் ஆறு இலங்கை மீனவர்களும் இந்தியாவில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப் பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

அவர்களை விடுவிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் மீன்பிடி அமைச்சு தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## பாம்புக்களா/ அமல்பொரி

**1.நாட்டு பாம்புக்களா**

**Botanical Name - Rauvolfia serpentina**
**Family - Apocynaceae**
**Engl- Indion Snake root**
**Sinh- Ekaveriya**

**2.காட்டு பாம்புக்களா**

**Botanical Name - Rauvolfia tetraphylla**
**Family - Apocynaceae**

இதில் தூய இனம் நாட்டுப்பாம்புக்களா ஆகும். இதற்கு பதிலாக (substitute) காட்டுப் பாம்புக்களாவும் பயன்படுத்தலாம். இலங்கையில் யாழ்ப்பாணத்தில் காட்டுப் பாம்புக்களாவின் பரம்பல் அதிகம் காணப்படுகின்றது. இலங்கையின் தென்பகுதியில் நாட்டு பாம்புக்களாதான் மருத்துவத்தில் கூடுதலாகப் பயன்படுத்தப்படுகின்றது.

நாட்டுப்பாம்புக்களாவின் தாயகம் தென் மற்றும் தென்கிக்கு ஆசியாவினைச் சார்ந்தவையாகும். மற்றும் இந்தியா, மலேசியா, இலங்கையின் தென்பகுதியிலும் பரவலாகக் காணப்படுகிறது.

நாட்டுப்பாம்புக்களா ஒரு மீற்றர் உயரம் வளரக்கூடிய ஒரு புதர்ச்செடியாகும். அல்லது 4 இலைகள் கணுவைச் சுற்றிலும் வட்ட அடுக்கில் காணப்படுகின்றன. முட்டை வடிவான மேற்புறம், பளபளப்பான பசுமை நிறம் கொண்டது. அடிப்புறம் மங்கலானது. மலர்கள் வெண்மை நிறமும் சிவப்பு வண்ணமும் கொண்டவை ; அல்லி புனல் வடிவினது; அல்லி குழல் வாய் குறுகலானது; மேற்பகுதியின் உட்புறமாக மென்தூவி கொண்டது; கனியானது பளபளப்பான சிவப்பு நிறத்தில் காணப்படும். ஆண்டு முழுவதும் மலர்கள் தோற்றும். குறிப்பாக மலர்கள் மாசி மற்றும் வைகாசி மாதங்களில் மலர்கின்றன.

★காட்டுப் பாம்புக்களாவானது சிறியதும் நிறைய கிளைகளைக் கொண்ட பெருஞ் செடியாகும். 0.6 தொடக்கம் 1.2 உயரம் வளரக்கூடியது. இதன் தாயகம் மேற்கு இந்தியாவாகும். இலங்கையின் வடபகுதியில் இதன் பரம்பல் அதிகம் காணப்படுகின்றது. ஒரே அச்சில் நான்கு கோளவடிவ இலைகள் காணப்படும். பூக்கள் பச்சை கலந்த வெண்ணிறமானவை. கோளவடிவப் பழங்கள் சிவப்



1.நாட்டு பாம்புக்களா



2.காட்டு பாம்புக்களா

பாக இருக்கும். நன்றாகப் பழுத்ததும் ஆழமான ஊதா நிறமாகக் காணப்படும்.

★ இரு சிற்றினங்களின் வேர்களும் மருத்துவக்குணம் மிகுந்தவை. இதைவிட நாட்டுப் பாம்புக்களாவின் இலைகளின் சாறு கண்விழி படலத்தின் ஒளிபுகா தன்மையினை போக்கவல்லது.

★வேரின் சாறு தளர் நெஞ்சுப்பை துடிப்பு, மிகுகுருதி அழுத்தம், தூக்கம் ஆகியவற்றுடன் மன உளைச்சலைத் தணிக்கும் திறன் கொண்டது. மனவாட்ட நோய் , மன நோய் , நரம்பு தொடர்பான நோய்கள் , பைத்தியம், மூளை நோய் ஆகியவற்றைக் குணப்படுத்த பயன்படுத்தப்படுகின்றது.

★இரு இனங்களின் வேர்களில் நாட்டுப் பாம்புக்களாவின் வேரானது வளைந்து காணப்படுவதுடன் கடினமானதாகவும் (hard) காணப்படும். காட்டுப் பாம்புக்களா வேரானது நேராகவும் உருளை வடிவானதாக 12 செ.மீ .நீளமும் 0.4 தொடக்கம் 2.5 செ.மீ விட்டமும் உடையதாகக் காணப்படும். இரு வேர்களும் மிகவும் கசப்பாகக் காணப்படும்.

★மேற்குறித்த இரு தாவரக்களினதும் வேர்களினது மருத்துவ குணத்திற்கான அடிப்படை வேதியற் பொருள் Reserpin எனும் அல்கலொட் ஆகும். இத்துடன் வேறு வேதியற் பொருட்களும் காணப்படும். ஆனால், மற்றைய அல்கலொயிட்டுகள் Reserpin இதனைவிட குறைவான செயற்றிறன் கொண்டவை.

இவ் வேர் சுதேச மருத்துவ சிகிச்சையில் உயர் குருதி அமுக்கத்தை குறைக்கும் பக்க விளைவுகளற்ற முக்கியமான மூலிகையாகும்.

இதன் வேர்களை சேகரித்து சிறுசிறு துண்டுகளாக அரிந்து மேற்றோல் சீவி பின் நன்கு கழுவி நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து சேகரித்து வைத்துக் கொள்ளவும்.

இதில் 2 தொடக்கம் 4 கிராம் அளவு காலை, மாலை வெந்நீரில்எடுக்கஅதிஉயர்குருதிஅமுக்கத்தை நன்கு குறைக்கும். குருதியமுக் கத்திற்கு ஏற்ற வகையில் அள வை சிறிது கூட்டி 8 கிராம் வரை காலை, மாலை உட்கொள்ளலாம்.

★ இதன் வேர் ஒரு பங்கிற்கு 4 பங்கு நீர்விட்டு 1/4 பங்காக வற்றக் காய்ச்சியபின் குடிநீரில் 60 மில்லி அளவு காலை, மாலை அருந்த பெண்களின் மக்கட் பேறுகாலத்தில் கர்ப்பப் பையினை சுருங்கி விரியச் செய்யும் தன்னை கொண்டது.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

காட்டுப்பாம்புக்களாவின் பரம்பல் அதிகம் வடமாகாணத்தில் அதிலும் யாழ். மாவட்டத்தில் காணப்பட்ட போதிலும் நாட்டுப் பாம்புக்களா வளரக்கூடிய மண்வளமும் யாழ். மாவட்டத்தில் காணப்படுகின்றது. இரு இனங்களும் விதைகள் மூலம் இனவிருத்தியடையும்.

★முக்கிய குறிப்பு

18 மாதங்கள் வளர்ந்த தாவரங்களின் வேர் மருத்துவப் பயனுக்காகத் தோண்டி எடுக்கப்படுகின்றது.

# வாழ்த்துகின்றோம்







இன்றைய தினம் இலங்கை
செஞ்சிலுவைச் சங்கம் -
யாழ் - கிளை

## திரு.இ.ச.பேரம்பலம் நாகரெத்தினம்

அவர்களது தன்னலமற்ற
சேவையை கௌரவித்து
"மனித நேய ஈகையாளன்"
என்னும் பட்ட விருதினை வழங்கி
வாழ்த்துகின்ற நிகழ்வு
சிறக்கவும், தொடர்ந்து இன்னும்
கல்விச் சமூகத்திற்கும்
நலிவிழந்தோர்க்கும் சேவை
செய்து தமிழையும் சைவசமய
விழுமியங்களை பேணுவதற்கும்
அரும் பெரும் தொண்டாற்ற
வாரிவளவு கற்பக விநாயகரை
வேண்டி நாமும் வாழ்த்துகின்றோம்.

(C-2453)

இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்
கஜமுகன் காட்வெயர்
எஸ்.பீ.என்.மோட்டோர்ஸ்
இ.ச.பே.நாகரெத்தினம் அன்சன்ஸ் யாழ்- கிளிநொச்சி சேவையாளர்கள்.

# உங்களை வருத்திக் கொள்ளாதீர்கள்!

ஒரு குறிப்பிட்ட வயது வந்தவுடன் உங்களுக்கு சம்பாதிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் வந்து விடுகின்றது. எந்தத் தொழிலைத் தேர்ந்தெடுத்தாலும், மற்றொன்று அதைவிடச் சிறப்பாகத் தோன்றுகின்றது. அதற்கு



மாற முடியுமா என்று மனம் அலைபாய்கின்றது.

ஆசை ஒன்றிலிருந்து மற்றதுக்கு மாறிக்கொண்டே இருப்பதால், அதன் இலக்கு மசமசப்பாகிவிடுகிறது. "இசையில்தான் என் ஆர்வம். ஆனால், வயிற்றுப்பாட்டிற்கு ஏதாவது வேலைகட்குப் போயாக வேண்டியிருக்கின்றதே!" என்று என்னிடம் ஓர் இளைஞன் கேட்டான்.

அவன் எந்த மாதிரி வேலைக்குப் போகவேண்டும்? இசைக் கருவிகளை விற்பனை செய்யும் கடையில் தரையைக் கூட்டுபவனாகக்கூட வேலைக்குச் சேரத் தயாராக இருக்க வேண்டும். இசைக்கருவிகளைத் துடைத்து சுத்தம் செய்தாலும் நூறு சதவிகித ஈடுபாட்டுடன் செய்யத் தயாராயிருக்க வேண்டும்.

இப்படி முழுமையாகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு இந்த வேலைகளில் ஈடுபட்டால், அவன் எப்படி மலரவேண்டுமோ, தானாக அப்படி மலர்ந்து விடுவான். எந்தத் துறையைத் தேர்ந்தெடுப்பது என்று தீர்மானிப் பதற்கான புத்திசாலித்தனம் உங்களிடம் இல்லையா?

ஒன்று செய்யுங்கள். இப்போது எந்தச் செயலில் இருந்தாலும் அதில் முழுமையாக உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள். முழுமையாக என்றால் இதயத்தையும் உயிரையும் அதற்காக ஒப்படைக்கத் தயாராயிருக்கும் முழுமை. செய்வதை நூறு சதவிகித ஈடுபாட்டுடன் செய்தால், உங்கள் உள்ளுணர்வு உங்களைச் சரியான பாதைக்குத் தானாக அழைத்துச் செல்லும்.

சந்தோஷமாக வேலை செய்வதாக உணர்ந்தால் மட்டுமே உங்களால் முழுமையாக செயலாற்ற முடியும். கட்டாயத்திற்காக வேலை செய்வதாக நினைத்து விருப்பம் இல்லாமல் செய்தீர்கள் என்றால், ரத்தக் கொதிப் பும், அல்சரும் மற்ற மனநோய்களும் கூப்பிடாமலே வந்து உள்ளே உட் கார்ந்து கொள்ளும்.

சங்கரன்பிள்ளை ஒருமுறை ரயிலில் பயணம் செய்தார். வசதியான இருக்கை கிடைத்தது உட்கார்ந்தார். அதன் பின்னும் தன் தலை மீதிருந்த பயணமூட்டையை அவர் இறக்கிக் கீழே வைக்கவில்லை. டிக்கெட் பரிசோதகர் வந்தார். உணவு விற்பவர் வந்தார். மூட்டையை வைத்துக் கொண்டு சங்கரன் பிள்ளையால் எந்த இயல்பான வேலையினையும் செய்ய முடியவில்லை.

சக பயணிகளில் ஒருவர் கேட்டார்...

"ஐயா, பெரிய மூட்டையாக இருப்பதால், கீழே இறக்கி வைக்க உதவி தேவைப்படுகிறதா?"

"அதெல்லாம் இல்லை!"

"ஓ, மூட்டையில் விலை உயர்ந்த பொருள் ஏதாவது வைத்திருப் பீர்கள். திருடர்களைப் பற்றிய பயம் இருந்தால், மூட்டையைக்கீழே வைத்து அதன் மீது நீங்கள் உட்காரலாமே?"

"இல்லையில்லை, எல்லாம் பழைய துணிகள் தான்"

"அப்புறம் அதை எதற்காக தலை மீது சுமக்கிறீர்கள்" என் பாரத்தை அநாவசியமாக இந்த ரயில் மீது சுமத்தக்கூடாது என்று பார்க் கிறேன் என்றார் சங்கரன்பிள்ளை. சங்கரன் பிள்ளையைப் போல சுமைகளை இறக்கி வைக்கத் தெரி யாதவர்களால் எதை ஒழுங்காகச் செய்ய முடியும்? குடும்பத்தையே தோள் மீது சுமப்பதாக நினைத்து நினைத்து துக்கத்துடன் வேலை செய்பவர்களுக்கு எந்த ஆசை நிறை வேறும்?

தயவு செய்து உங்கள் மனப் பாரங்களை இறக்கி வையுங்கள். செய்வதைச் சந்தோஷமாகச் செய்யுங்கள். நீங்கள் செல்ல வேண்டிய ரயில் நான்கு மணி நேரம் தாமதமாகப் புறப்படும் என்று சொல்லிவிட்டார்கள்.

உலகமே முடிவுக்கு வந்து விட்டது போல் அத்தனை பெரியவர்களும் முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்வீர்கள். காத்திருக்கும் நான்கு மணி நேரத்தையும் முள் மேல் உட் கார்ந்து, ரயில்வேயை விடாமல் சபித்துக் கொண்டுருப்பீர்கள். ஆனால், பயணத்திற்காக காத்திருக்கும் குழந்தைகளைக் கவனியுங்கள். கைக்குக் கிடைத்த சிறு பொருட்களை வைத்து, அவர்கள் இருக்கும் இடத்தில் ஜாலியாக விளையாடியபடி எந்தத் துக்கமும் இல்லாமல் இருப்பார்கள்.

தேவையில்லாமல் அவர்கள் தங்களை வருத்திக் கொண்டிருப்பதில்லை. கிடைத்த தருணங்களைச் சந் தோசமாக அனுபவிக்கிறார்கள்.



ஆன்மீகம் 18

அதிக சிரமம் இல்லாமல், தங்கள் வாழ்க் கையைப் பூரணமாக்கிக் கொள்கிறார்கள்.

ஆனால் நீங்கள்? வாழ்க்கையை சந்தோசமாக்கிக் கொள்ள உங்களையே வருத்திக்கொள்கிறீர்கள். ஆனாலும் சந்தோசத்தை அனுபவிக்கத்தெரியாமல் தோற்றுவிடுகிறீர்களே? மனதைத் துக்கமும் படபடப்பும் அழுத்தாமல் பொறுப்புடன் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யுங்கள்.

இந்த ரயில் இல்லையென்றால், பஸ் பிடிக்கலாம். டாக்ஸிபிடிக்கலாம். வேறுவாகனங்கள் கிடைக்குமா என்று பார்க்கலாம். எதுவும் கிடைக்க வாய்ப்பில்லையென்றால், காத்திருக்கக் கிடைத்த நேர்த்தை ஆனந்தமாக இரநது செலவு செய்யலாம்.

துக்கப்படுவதால் மனப்பாரம் குறையப்போவதில்லை. சந்தோஷமான மனிதர்களால்தான் எந்த வேலையையும் சிரமமில்லாமல் விளையாட்டாகச் செய்ய முடியும்.

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# மின்பொறி ஊடகங்களில் செய்திச் செம்மையாக்கம்

01



ஊடகங்கள், அச்சு ஊடகங்கள் எனவும் மின்பொறிஊடகங்கள் எனவும் வகுக்கப்பெறும். மரபு ஒன்று உண்டு. தொழில்நுட்ப விருத்தியின் பின்வரும், கணணிப்பயன்பாட்டின் பின்னரும் இவ்வாறு வகுக்க முடியாது எனினும் இப்பொழுதும் கூட இருவகு நிலைகளையும் எடுத்துக்கூறுவர். மின்பொறி ஊடகங்கள் எனக் கொள்ளப்படுபவை வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் ஆகியனவாம். ஏறத்தாழ மூன்று, நான்கு தசாப்தங்களுக்கு முன்னர், ஆங்கிலத்திரைப்படங்கள் காண்பிக்கப் படுவதற்கு முன்னர் செய்திகளைக் காட்டுவது மரபாக இருந்தது. இப்பொழுது அந்த மரபு இல்லை. தென்னாசிய நாடுகளைப் பொறுத்தவரை செய்திகளைப் பரப்புவதில் வானொலியும்தொலைக் காட்சியுமே முக்கியமான இடம் பெறுகின்றன.

செய்திகளை அறியத்தரும் ஊடகங்களில் அதிக அளவிலான மக்களை அடையக்கூடிய ஊடகங்களாக வானொலியும் ,தொலைக்காட்சியுமே உள்ளன. அறிவுமட்டத்தின் அடிப்படையில் மக்களை மேலிருந்து கீழாக பட்டியலிட்டால், ஆகவும் கிழ் மட்டத்தில் உள்ளவர்களையும் அதாவது பாமர மக்களையும் எளிதாகக் கவரக்கூடிய ஊடகங்கள் அவை என்பர்.

> "கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில், சமர்ப் பிக்கப் பட்ட ஆய்வுக்கட்டுரை"

இதன் கார்ரணமாக, அச்சுஊடகத்தை விடவும் சிறப்பியல்புகளைக் கொண்டிருக்க வேண்டிய தேவை தொலைக் காட்சிமற்றும் வானொலி ஊடகங்களுக்கு இருக்கிறது. வானொலியின் பிரதான இயல்பு, அது காதால் கேட்கப் படுவது மட்டுமே வானொலியை ஒரு பார்வையற்ற சாதனம் (Blind Media)என்பர்.

வானொலியில் பேசுபவரின் குரலைக் கேட்கும் எவரும் அந்தக் குரல் தரும் செய்தியையோ தகவலையோ தமது மனக்கண்ணில் ஓவியமாகத் தீட்டாமல் இருப்பதில்லை இது வானொலிக்கே உரிய தனிச்சிறப்பாகும்.

வானொலி ஒரு நேர்கோட்டு ஊடகமாகவும்(Linear) இருக்கிறது. அதாவது வானொலி ஊடகத்தின் ஊடாக ஒலிபரப்பப்படும் விடயம் நேயரை ஓரேதடவையில் சென்றடைவது அவசியம். சொல்லப்படும் விடயம் தெளிவில்லாததாக இருக்கும் பட்சத்தில், வாக்கியத்தை ஆரம்பத்திலிருந்து மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ள வழிவகுக்கும் பத்திரிகையின் வசதி வானொலி ஊடகத்துக்கு உரித்தானது அல்ல.

ரசிகனின் மனவெளியில் காட்சிப் படிமத்தை உருவாக்கக் கூடிய ஆற்றலும், நேர்கோட்டுத்தன்மையும் வானொலியின் சிறப்பம்சங்கள். இந்த அம்சங்களே அதற்கான வரைவிலக்கணமும் ஆகின்றன. கேட்பது எப்பொழுது யார், யார் கேட்பது என்பது முக்கியமான அம்சமாகும். கல்வித்தகைமையை உடையவர்கள் மாத்திரமல்லாமல் குறிப்பிட்ட மொழியை பேசுபவர்கள் எல்லோருமே கேட்பார்கள். படித்தவர்களும் கேட்கலாம். படிக்காதவர்களும் கேட்கலாம். தலைநகரில் உள்ளவர்களும் கேட்கலாம்.

எனவே, வானொலியின் மூலம் நேயர்களுக்கு அறியத்தரக்கூடிய செய்திகளைத் தேர்ந்தெடுப்பது முதற்கொண்டு செய்திகளை செவ்வையாக்கம் செய்து நேயர்களை அடையச் செய்யும் வகையில் பல்வேறு விடயங்களைக் கவனத்திற் கொள்ள வேண்டியது அவசியமாகும். வானொலியென்பது சகலரையும் அடையக் கூடிய ஊடகமாக அமைவதால் அதில் பயன் படுத்தப்படும் மொழிக்கென சில பண்புகள் இருக்கின்றன. முதலாவது பண்பாக அமையவேண்டியது எளிமையாகும் Simplicity). மேற்குலக ஊடக மொழியில் இதனை KISSஎன்பார்கள் இதன் அர்த்தம்Keep It Simple and Short என்பதாகும்.

மேலைத்தேய ஊடக பயிற்சிக்கல்லூரிகள் ஒரு வாக்கியத்தில் குறைந்த பட்சம் 35 சொற்கள் மாத்திரமே இடம் பெற வேண்டும் என்ற நியமத்ததைக் கடைப்பிடித்து வருவதையும் குறிப்பிடலாம்.

வானொலிச் செய்தி எந்தளவு எளிமையாக, எந்தளவு குறுகியதாக செவ்வையாக்கம் செய்யப்படுகிறதோ, அந்தளவுக்கு அது மக்களைச் சென்றடையக்கூடும் என்பது வெள்ளிடை மலை.

**வீ.ஏ.திருஞானசுந்தரம்,**
**முன்னாள் பிரதிப்பணிப்பாளர்நாயகம்,**
**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.**

அதே வேளையில் வரும் வாக்கியங்கள் நீண்ட வசனங்களாக பெயர் விசேடங்கள், வினை விசேடங்கள் என வாக்கியத்தை நீட்டாமல் அமைத்தல் முக்கியம். ஆங்கில மரபிலே கூறினால் adjectival, adverbial, clauses பெரிதும் தவிர்க்கப்பட வேண்டும்.

(தொடரும்)

# கொடையாளி காக்கும் சந்திரபகவான்

சந்திரபகவான் எந்தெந்த இடங்களில் இருந்தால் எவ்வித பலன்கள் தருவார் என்பதில் ஒவ்வொரு ஜோதிட நூலுக்கும் இடையே சிறிய வித்தியாசம் உள்ளது. பொதுவாக வளர்பிறைச் சந்திரன் சிறப்பான பலன்களையும் தேய்பிறைச் சந்திரன் அதில் பாதிப் பலன்கள் அல்லது பிரச்சினைக்குரிய பலன்களையும் கொடுப்பார். சுப கிரகத்தால் பார்க்கப்பட்ட சந்திரன், சுபகிரகத்துடன் சேர்ந்த சந்திரன் அதிக பலத்தை அடைகிறார்.



நீச்சக்கிரகம் அல்லது பாப கிரகத்துடன் சேர்ந்த சந்திரன், பாபகிரகத்தால் சேர்க்கப்பட்ட சந்திரன் பிரச்சினைக்குரிய பலனை உண்டு பண்ணுகிறார்.

ஜாதகர் ஜனித்த ஜென்ம லக்னத்தில் இருக்கக் கூடிய சந்திரன் நல்ல சீரத்தையும், ஆயுளையும், தைரியத்தையும், செல்வம் சேர்ப்பதில் ஆர்வமும் கொடுப்பார். சந்திரன் பலம் குறைந்திருந்தால் மாறுபட்ட பலன் உண்டாகும்.

சந்திரபகவான் இரண்டாம் இடத்தில் இருந்தால் நிறைந்த சொத்துக்களையும், நல்ல வித்தையையும், எதிலும் நாட்டத்தையும் கொடுப்பார். ஆனால், உடலில் ஏதாவது ஒரு பாகத்தில் சிறிய குறை உண்டாகும்.

பூரணபலம்பெற்று மூன்றாம் இடத்தில் சந்திரபகவான் இருந்தால் திறமையான சகோதரனையும் அல்லது சகோதரியையும், கீர்த்தியையும், மிகுந்த தைரியத்தையும் கொடுப்பார்.

ஜென்ம லக்னத்தில் இருந்து நாலாம் இடத்தில் சந்திரன் இருந்தால் திறமையால் சௌகரியத்தை அடைவார். நினைத்த பொருள் கைவரக்கூடும். மற்றவர்களுக்கு கொடுப் பதில் பெருமை உடையவராக இருப்பார். நூதன வாகனங்கள் இவரைத் தேடி வரும். நிறைய நண்பர்கள் இருப்பார்கள்.

சந்திரன் பலம் குறைந்திருந்தால், தாய், தாய்வழி உறவுக்கு கெடுதலையும், மன வருத்தத்தையும் கொடுப்பார்.

ஐந்தாம் இடத்தில் சந்திரன் இருந்தால் கற்பனை வளம் மிக்க புத்திரன் அல்லது புத்திரி உண்டாவார்கள். எதையும் நிதானித்து யோசித்து செய்வார்கள்.

ஆறாம் இடத்தில் சந்திரபகவான் இருந்தால் அவசரப்பட்டு செய்யும் செயல் களால் தொல்லைகளை சந்திப்பார். வியாதிகள் உண்டா னாலும் அதை ஜெயித்து விடுவார். கடன் உண்டாகும். ஆனால் தன் திறமையால் அதை ஜெயிப்பார்.வயிற்றுப் பகுதியில் ஏதாவது ஒரு தொல்லை உண்டு.

ஏழாம் இடத்தில் சந்திர பகவான் வீற்றிருக்க திறமையானவராகவும், மற்றவர்களைக் கவரக் கூடிய பேச்சு, தோற்றம் உடையவராகவும் விளங்குவார்.திருமண விடயத்தில் மறைமுகமான சிறிய தொந்தரவுகளை சந்திப்பார்.

சந்திரன் எட்டாம் இடத்தில் இருந்தால், மருத்துவ செலவுகள் இருந்து கொண்டே இருக்கும். சந்திரன் பலம் குறைந்தால் தண்ணீரால் கண்டம் உண்டாகும். மனதளவில் தளர்ச்சி, பயம் இருக்கும்.




ஒன்பதாம் இடத்தில் சந்திரன் இருந்தால் நல்லது செய்யக்கூடிய பரந்த எண்ணமும் தர்ம சிந்தனையும், மற்றவர்களுக்குக் கொடுக்கக்கூடிய கொடை குணமும் உண்டு. மகன் அல்லது மகளால் புகழ் பெறுவார். எடுத்த காரியத்தில் கடைசிவரை போராடி வெற்றியடைவார்.

பத்தாம் இடத்தில் சந்திரபகவான் இருந்தால் மற்றவர்களுக்கு பயன்தரக்கூடிய செயல்களை செய்பவராகவும், நல்லவர்களால் விரும்பப்படக் கூடியவர்களாகவும், கடல்பிரயாண இலாபங்களையும் அடைவார்.

பதினொறாம் இடத்தில் சந்திரபகவான் இருந்தால் விட்டுக்கொடுக்கக்கூடிய மனபாவம் உள்ளவராகவும், நல்லவேலைக்காரர்கள் மற்றும் தீர்க்க ஆயுளைப் பெற்றவராகவும் விளங்குவார்.

சந்திரன் பன்னிரெண்டாம் இடத்தில் இருந்தால் மற்றவர்களால் குறைத்துப் பேசக் கூடியவராகவும், அதிக விரயத்தை உடையவராகவும் எதிலும் நிதானமாக செயற்படக்கூடியவராகவும் விளங்குவார்.

சந்திரபகவான் பொதுவாக, கற்பனை வளத்திற்கு அதிகாரியாக விளங்குகிறார். புண்ணிய நதிகளில் குளித்தல், மற்றவர்களைக் கவரக்கூடிய தோற்றம், அழகிய கண்கள், அற்புதமான செயல்கள், கவிதை, கட்டுரை,பாடல் இவற்றையெல்லாம் சந்திர பகவான் வாரி வழங்குகிறார்.

பொதுவாக உச்சத்திலிருக்கும் கிரகங்கள் பலம் பெற்றதாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. சந்திரபகவானுக்கு வளர்பிறை பலமும் சூரியனுக்கு திக் பலமும் உயர்ந்ததாகும்.

மூலத்ரி கோணத்தில் உச்சத்தில் இருக்கும் பலனை விட முக்கால் பங்கு பலனை கொடுப்பார். ஆட்சியில் இருக்கும் போது உச்சத்தில் பாதி பலனைக் கொடுப்பார். நீச்சம் அடையும் போதோ, சத்ரு வீட்டில் இருக்கும் போதோ தன் பலத்தை இழக்கிறார்.

ஜென்ம லக்னத்தில் இருக்கும் கேந்திர பலத்தின் முழு பலத்தையும் நாலாம் இடத் தில் அதில் கால் பங்கு பலனையும், பத்தாம் இடத்தில் அரை பங்கு பலத்தையும், ஏழாம் இடத்தில் முக்கால் பங்கு பலனையும் கொடுக்கிறார்.பொதுவாக கிரகங்களுக்கு ஏழாம் இடத்துப் பார்வையே முழு பலன் தரும் பார்வையாகச் சொல்லப்பட்டுள்ளது.

# பொதுமக்களின் சாட்சியங்கள் 19ஆம் திகதி வரை பதிவு

## நல்லிணக்க ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

பொதுமக்களின் சாட்சியங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கையை கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு எதிர்வரும் 19ஆம் திகதி தொடக்கம் முடிவுக்குக் கொண்டுவரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாத்தறையிலும் 19ஆம் திகதி காலியிலும் பொது மக்களின் சாட்சியங்களை ஆணைக் குழு இறுதியாக பதிவு செய்யவுள்ளது.

இதுவரையில் ஆணைக்குழுவால் சேகரிக்கப்பட்ட பொது மக்களின் சாட்சியங்கள் முறையாகத் தொகுக்கப்பட்டு இறுதி அறிக்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் எதிர்வரும் மே மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக ஆணைக்குழுவின் ஊடக ஆலோசகர் லக்ஷ்மன் விக்ரமசிங்க தெரிவித்தார்.

ஆணைக்குழு பொதுமக்களின் சாட்சியங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளை 11.08.2010 இல் ஆரம்பித்தது. அதன் கால எல்லையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 15.05.2011 வரை நீடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# விசர்நாய் கடித்ததில் மாணவியொருவர் மரணம்

பக்கத்து வீட்டு நாய்க்குட்டியுடன் விளையாடிய போது அந்த நாய்க்குட்டி கடித்ததில் 18 வயது மாணவியொருவர் மரணமடைந்துள்ளார்.இச்சம்பவம் மாத்தறை மாவட்டத்தின் அக்குரஸ்ஸ பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது.

இம்மாணவிக்கு நாய் கடித்ததை பெற்றோர் அறிந்து சரியான சிகிச்சையைப் பெற்றுக்கொடுக்கத் தவறி விட்டனர். சில நாட்களில் மாணவிக்கு காய்ச்சல் ஏற்பட்டு அக்குரஸ்ஸ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

மாணவி திடீரென நாய்போல குரைத்துக் குரைத்து மரணம் ஆனார். மாணவிக்கு கடித்த நாய் பின்னர் அடித்துக்கொல்லப் பட்டது. மாத்தறை மரண விசாரணை அதிகாரி லலித் டீ சில்வா மரண விசாரணை நடத்தினார்.விசர்நாய் கடித்ததால் மரணம் சம்பவித்தது எனத் தீர்ப்பு வழங்கினார். (ஸ்ரீ-2)

# செயலமர்வு

யாழ்ப்பாணம் தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினால் க.பொ.த. (உயர்தரம்) விஞ்ஞானபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் இன்று புதன்கிழமை இரசாயனவியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் நாளை வியாழக்கிழமை உயிரியல் மற்றும் பௌதீகவியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் நடைபெறுமென தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)



கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலையின் தமிழருவி சஞ்சிகை வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வின் தலைமையுரையை சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் ஆற்றுவதையும் வாழ்த்துரையை செஞ்சொற்செல்வர் ஆறு திருமுகன் நிகழ்த்துவதையும் சஞ்சிகையின் முதற்பிரதியை யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் கி.விசாகரூபன் வழங்க செல்லப்பா நடராஜா பெற்றுக்கொள்வதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# வவுனியா நலன்புரிநிலைய மக்களின் மீள்குடியேற்றத்தில் அவசரமில்லை

வவுனியா பூந்தோட்டம் மற்றும் சிதம்பரபுரம் நலன்புரி நிலையங்கள் மூடப்படவுள்ளதால் அங்கு தங்கியுள்ள மக்களை அவரவர் சொந்த இடங்களுக்கு செல்ல வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் மேற்படி நலன்புரி நிலையங்களிலிருந்து வருகின்ற மக்களை உடனடியாக மீள்குடியேற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லையென யாழ், கிளிநொச்சி அரசாங்க அதிபர்கள் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கருத்துத் தெரிவிக்கையில்,

வவுனியா பூந்தோட்டம் மற்றும் சிதம்பரம் நலன்புரி நிலையங்களிலிருந்து வருகின்ற மக்களை தங்க வைக்கும் முகமாக யாழ்ப்பாணத்தில் புதிதாக நலன்புரி நிலையமொன்று அமைப்பதற்கான திட்டமோ, காணி இல்லாதவர்களுக்கும் புதிதாக காணி வழங்கி அவர்களை மீள்குடியேற்றுவதற்கான திட்டமோ எதுவும் இல்லை. மேற்படி நிலையங்களிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகின்ற மக்கள் தங்களது உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளில் தங்கியிருக்க விரும்பினால் அவர்கள் அங்கு தங்கியிருக்கலாமெனவும் அவர் கூறினார்.

உயர்பாதுகாப்பு வலயங்களில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாக நான் ஏற்கனவே ஊடகங்களுக்கு அறிவித்துள்ளேன். கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட இப்பகுதிகளில் மக்களை மீள்குடியேற்றுவதற்காகப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக்காகக் காத்திருக்கிறோம். பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்தவுடன் மக்கள் அவரவர் சொந்த இடங்களில் மீள்குடியேறுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் எனவும் அவர் கூறினார்.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில்,

வவுனியா பூந்தோட்டம் மற்றும் சிதம்பரபுரம் நலன்புரி நிலையங்களிலிருந்து வருகின்ற மக்களுக்கு உடனடியாகக் காணி வழ்ங்கி தங்க வைக்க முடியாது.

கடந்த வாரம் தனது பிரதிநிதியொருவர் மேற்படி நலன்புரி நிலையங்களிலுள்ள மக்களைச் சென்று பார்வையிட்டு அவர்களுடன் கலந்துரையாடியதாகவும் இதன் போது 19 குடும்பங்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் குடியேறுவதற்கு இணக்கம் தெரிவித்ததாகவும் அவர் கூறினார்.

கிளிநொச்சி வரவுள்ள இக் குடும்பங்கள் கிளிநொச்சி மத்திய கல்லூரி இடைத்தங்கல் நிலையத்தில் தங்க வைக்கப்படுவார்கள். இருப்பினும் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளில் தங்க விரும்புபவர்கள் அங்கு தங்கலாமெனவும் தெரிவித்தார். முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ஏ. பத்திநாதன் கூறுகையில்,

வவுனியா பூந்தோட்டம் மற்றும் சிதம்பரபுரம் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை கடந்த வாரம் தனது பிரதிநிதியொருவர் சென்று பார்வையிட்டுள்ள நிலையில் 27 குடும்பங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் குடியேறுவதற்கு இணங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் குடியேறவுள்ள இக்குடும்பங்கள் இந்திய வீடமைப்புத் திட்டத்தின் முதலாவது திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதாகவும் கூறுனார். (ந-5)

# தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகள் புதுடில்லி நோக்கி நடைப்பயணம்

தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் புதுடில்லிக்கான நடைப் பயணம் ஒன்றை ஆரம்பித்துள்ளதாக த ஹிந்து பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழகம் மற்றும் ஒரிசா ஆகிய அகதி முகாம்களில் உள்ள சுமார் 100 இலங்கை அகதிகள் இந்த நடைப் பயணத்தை மேற்கொண்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

டில் லியில் உள்ள அரசாங்க மற்றும் எதிர்க்கட்சிகளின் தலைவர்களை சந்தித்து கட ந்த 1987 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இந்து இலங்கை உடன்படிக்கை அடிப்படையில் தமக்கான உரிமைகளை நிர்ணயிக்குமாறு கோரும் நோக்கில் இந்த நடைப் பயணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# ஸ்ரீஅம்மா பகவான் பாத பூஜை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ அம்மா பகவான் பாத பூஜை நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு சுழிபுரம் மேற்கு கலைமகள் சனசமூக நிலையத்தில் சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையத்தினரால் நடாத்தப்படவுள்ளது.

அன்றைய தினம் பக்தர்கள், மக்கள் அனைவரையும் பாதபூஜை நிகழ்வில் கலந்து கொண்டு பாத தரிசனத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள். (ஸ்ரீ-2)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கடன்வசதி

(கொழும்பு)

ஹற்றன் நஷனல் வங்கி வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கடன்வசதியை செய்து கொடுக்கும் திட்டம் ஒன்றினை ஆரம்பித்து இருப்பதாக அந்த வங்கியின் தலைவர் சி.ரி. விஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

வங்கியிலிருந்து பெற்ற கடனை திருப்பிச் செலுத்தத்தவறிய விவசாயிகளுக்கும் எதிர்வரும் கால போகத்திற்கான மேலதிக கடன்கள் வழங்கப்படும் என்று அவர் தெரிவித்தார். ஹற்றன் நஷனல் வங்கி பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள சிறிய கைத் தொழி லாளர்களுக்கும் கடன்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-9)

# இலங்கைக்கு எதிராக சூழ்ச்சிகரமான முறையில் காய்நகர்த்துகிறது இந்தியா

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றச்சாட்டு

இலங்கைக்கு எதிரான மனித உரிமை மீறல் சாட்சியங்களின் பின்னணியில் இந்தியா உள்ளதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றஞ் சாட்டியுள்ளது. ஜெனீவாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள சர்வதேச மனித உரிமைகள் பேரவையின் மாநாட்டில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு சர்வதேச உதவிகள் இடைநிறுத்தப்படலாம் என்று குறித்த இயக்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையை எதிர்கொள்ள ஜெனீவா செல்லும் இலங்கை பிரதி நிதிகள் தயாராக இருக்க வேண்டும் என்றும் எந்தவொரு சூழ்நிலையிலும் தாய் நாட்டை காட்டிக்கொடுக்கும் வகையில் நடந்து கொள்ளக்கூடாது என்றும் நாட்டை துண்டாடும் அந்நிய சக்திகளை தோற்கடிக்க வேண்டும் என்றும் அவ் இயக்கம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாஸ அமரசேகர தெரிவிக்கையில் , மேற்குலக நாடுகள் தொடர்ந்தும் இலங்கையைத் துண்டாடும் முயற்சியில் ஈடுபடுகின்றது. தற்போது இலங்கைக்கு எதிரான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை சுமத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தச் செயற்பாடுகளின் பின்னணியில் இந்தியாவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் உள்ளன. எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் நடை பெறவுள்ள சர்வதேச மனித உரிமைகள் பேரவை மாநாட்டின் போது இலங்கை அரசாங்கத்தை அச்சுறுத்துவதே இவர்களின் நோக்கமாகும்.

இதற்கு அமைவாகவே தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் தெற்கின் அரசியல் வாதிகளையும் மகாநாயக்க தேரர்களையும் சந்தித்து தனி நாட்டிற்கான அரசியல் தீர்வை பெற்றுக் கொள்ள முயற்சிக்கின்றனர். இதற்கு மெரு கூட்டும் வகையில் இந்தியா மிகவும் சூழ்ச்சிகரமான முறையில் காய்நகர்த்தல்களை முன்னெடுக்கின்றது.

எனவே, இலங்கை அரசாங்கமும் நாட்டு மக்களும் ஜெனீவாவில் முன் னெடுக்க உள்ள நாட்டுக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து விழிப்புடன் இருக்க வேண்டும் என்றார். (ஸ்ரீ-2)




- ★ 1568-நெதர்லாந்தின் அனைத்து மக்களுக்கும் ரோமன் கத்தோலிக்கத் திருச் சபையினரால் மரண தண்டனை விதிக்கப்பட்டது.
- ★ 1646-இங்கிலாந்தின் முதலாவது உள்நாட்டுப் போரின் கடைசிச் சமர்டெவன் நகரில் இடம்பெற்றது.
- ★ 1796-ஆங்கிலேயர் கொழும்பை டச்சுக்களிடம் இருந்து கைப்பற்றினர்.
- ★ 1838-தென்னாபிரிக்காவில் நாட்டல் என்னுமிடத்தில் சூலு இனத்தவரால் வூட்ரெக்கர்கள் எனப்படும் பிரித்தானிய குடியேறிகள் 300 பேர் வரையில் (பெண்கள், குழந்தைகள் உட்பட) படுகொலை செய்யப்பட்டனர்.
- ★ 1918-லித்துவேனியா ரஷ்யாவிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- ★ 1934-ஆஸ்திரியாவில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.
- ★ 1937-வொலஸ் கரோத்தேர்ஸ் நைலோனுக்கான காப்புரிமம் பெற்றார்
- ★ 1945 இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்காவின் படைகள் பிலிப்பைன்ஸின் கொரெகிடோர் தீவில் தரையிறங்கினர்.
- ★ 1945- இரண்டாம் உலகப்போர்: முதல் தடவையாக அமெரிக்கப் போர் விமானம் டோக்கியோவைத் தாக்கியது.
- ★ 1945-அமெரிக்கப் படைகள் பிலிப்பைன்ஸின் பட்டான் குடாவை மீளக் கைப்பற்றினர்.
- ★ 1947- 80 ஆண்டுகளாக பிரித்தானியர்களாக இருந்த கனேடியர்கள் முதற் தடவையாக கனேடிய குடியுரிமையைப் பெற்றனர். பிரதமர் வில்லியம் லியோன் மக்கென்சி முதலாவது குடியுரிமையைப் பெற்றார்.
- ★ 1959- ஜனவரி1 இல் புல்ஜென்சியோ பட்டீஸ்டாவை ஜனாதிபதி பதவியில் இருந்து அகற்றிய பிடல் காஸ்ட்ரோ கியூபாவின் புதிய தலைவரானார்.
- ★ 1961- எக்ஸ்ளோரர் 9 (S-56a) விண்ணுக்கு ஏவப்பட்டது.
- ★ 1983- அவுஸ்திரேலியாவின் விக்டோரியா மற்றும் தெற்கு அவுஸ்திரேலியா மாநிலங்களில் இடம்பெற்ற காட்டுத் தீ யில் சிக்கி 71 பேர் கொல்லப்பட்டனர்.
- ★ 1985- ஹெஸ்புல்லா தீவிரவாத இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.
- ★ 1986- சோவியத் கப்பல் மிகைல் லெர்மொண்டொவ் நியூசிலாந்தில் மூழ்கியது.
- ★ 1988- சிங்களத் திரைப்பட நடிகரும் அரசியல்வாதியுமான விஜய குமாரதுங்க கொழும்பில் சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.
- ★ 2005 கியோட்டோ உடன்பாடு நடைமுறைக்கு வந்தது.

### பிறப்பு

- ★ 1934- தெளிவத்தை ஜோசப் ஈழத்தின் சிறுகதையாளர், நாவலாசிரியர்

### இறப்புக்கள்

- ★ 1656- தத்துவ போதக சுவாமிகள் (றொபேட் டீ நொபிலி) ரோமைச் சேர்ந்த கத்தோலிக்கக் குரு தமிழ்நாட்டில் சமயப்பணி ஆற்றியவர் (பி.1577)
- ★ 1885- வீ. இராமலிங்கம், ஈழத்து புலவர்
- ★ 1907- ஜியோசு கார்டுச்சி, நோபல் பரிசு பெற்ற இத்தாலிய எழுத்தாளர் (பி.1835)
- ★ 1932- பெர்டினண்ட் புயிசோன், நோபல் பரிசு பெற்றவர் (பி.1841)
- ★ 1944- தாதாசாஹெப் பால்கே, இந்தியத் திரைப்படத்துறையின் முன்னோடி (பி.1870)
- ★ 1954- டி.கே.சிதம்பரநாதன், இரசிகமணி
- ★ 1988- விஜயகுமாரதுங்க , சிங்களத் திரைப்பட நடிகர், அரசியல்வாதி (பி.1945)

**2000ஆம் ஆண்டில் தர்மபுரி பேருந்து தீ வைப்பு நிகழ்வில் மூன்று மாணவிகளை உயிருடன் எரித்துக்கொலை செய்த மூவருக்கு தூக்குத்தண்டனையும் மேலும் 25 பேருக்கு 7 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டது.**

தீமையிலும் நன்மை. மக்கள் எல்லாவற்றையும் மிக்க கவனத்துடன் நிதானித்துப் பார்த்தால், ஊன்றி நோக்கினால் தீமையிலும் நன்மைகள் இருக்கக் காணலாம். – ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# வட பகுதி முஸ்லிம் மக்களுக்கு தார்மீகப் பொறுப்பு உண்டு

யுத்த காலத்தில் வடக்கில் இருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டார்கள் என்ற விவகாரம் இன்றுவரை பிரஸ்தாபிக்கப்பட்டு வருகின்ற போதிலும்,

அந்தச் சம்பவம் தமிழ் மக்களின் விருப்பிற்குரியதல்ல என்பதை முஸ்லிம் சகோதரர்கள் உணர்ந்து கொள்வார்கள் என்றே நம்பப்படுகின்றது.

முஸ்லிம்கள் வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்டமை யுத்த காலத்தில் நடந்து முடிந்த துன்பங்களில் ஒன்றென எண்ணிக்கொண்டு,

தமிழ்–முஸ்லிம் உறவைக் கட்டியெழுப்புவதற்கான வழிவகைகள் குறித்து ஆராய்வதே பொருத்துடையதாகும்.

சிறுபான்மை இனங்கள் ஒற்றுமைப்படாமல் இருக்கும் ஒவ்வோர் சந்தர்ப்பமும் பேரினவாத சக்திகள் எழுகை பெறுவதற்கு உதவுவதாக அமையும்.

இருந்தும் தமிழ்– முஸ்லிம் உறவு பலப்படுவதை தடுப்பதில் பேரினவாத சக்திகள் விழிப்பாக இருக்கின்றன. இரு இனங்களும் ஒற்றுமைப்படுவதை தடுப்பதற்கான கூரிய ஆயுதமாக, 'வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டார்கள்' என்ற விடயம் பயன்படுத்தப்படுகின்றது.

வட பகுதி முஸ்லிம் மக்களின் இடப்பெயர்வு எத்துணை துன்பமானதோ! அதைவிட பன்மடங்கு துன்பமான வாழ்வை தமிழ் மக்கள் இந்த நாட்டில் அனுபவித்து வருகின்றனர்.

ஆகவே சிறுபான்மை இனங்கள் தங்களுக்குள் ஏற்பட்ட கசப்புணர்வை நினைந்து நினைந்து பகைமையை அழியவிடாமல் பாதுகாப்பது அபத்தமானது.

இஃது சிறுபான்மை இனங்கள் இந்த நாட்டில் அடக்கப்படுவதற்கு வழிவகுக்குமேயன்றி வேறு எதற்குமே உதவமாட்டா! எனவே தமிழ்– முஸ்லிம் மக்களின் இரு தரப்பு உறவை வலுப்படுத்துவதில் முஸ்லிம் மக்களின் வகிபங்கு அதிகமாகத் தேவைப்படுகின்றது.

அதேநேரம் யுத்தத்தால் நொந்துகெட்டு நூலாகிப் போயுள்ள தமிழ் மக்களின் இழப்பிலும்–சோகத்திலும் முஸ்லிம் மக்கள் இரக்கம் காட்டவேண்டும்.

எனினும் துரதிர்ஷ்டவசமாக முஸ்லிம்கள் சிலர் தமிழர்களின் பண்பாட்டுச் சின்னங்களை விற்பனை செய்வதில் வேகமாகச் செயற்படுகின்றனர்.

தமது தொழில் முயற்சி என்ற அடிப்படையில் அவர்கள் செயற்பட்டாலும் அதற்குள் தமிழின அடையாளங்களின் அழிப்பு மறைமுகமாக இடம்பெறுகின்றது என்பதை அன்பிற்குரிய முஸ்லிம் சகோதரர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் தமிழ் மக்களின் பண்பாட்டு அடையாளச் சின்னங்கள் படையினரின் சிறு வர்த்தகத்திற்குரிய விற்பனைப் பொருட்களாகிவிட்டன.

அவர்களின் இத்தகைய வர்த்தக முயற்சிகளுக்கு அங்கு தேடிச் செல்லும் முஸ்லிம் சகோதரர்களே காரணம் என்பதற்குப் பல சான்றாதாரங்கள் உள்ளன. எனவே யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழினத்தின் அவலநிலையை, இடப்பெயர்வால் அவஸ்தைப்பட்ட முஸ்லிம் சகோதரர்கள் உணர்ந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கையோடு இவை முன்வைக்கப்படுகின்றன.

# 50 ஆயிரம் வீடு அமைக்கும் திட்டம் ஒப்பந்தம் இதுவரை செய்யப்படவில்லை!

(கொழும்பு)

போரினால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கில் இந்தியா 50 ஆயிரம் வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்கான இரு நாடுகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் இதுவரை கைச்சாத்திடப்படவில்லை எனத் தெரியவந்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போர் முடிபுக்கு வந்தபின்னர் இப் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களுக்கு 50ஆயிரம் வீடுகளை நிர்மாணித்துத் தருவதாக இந்தியா இலங்கை அரசாங்கத்திற்கு உறுதியளித்திருந்தது.

இந்திய நிறுவனமான Hindutan Prefab Ltd நிறுவனத்துடன் இவ் வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பது தொடர்பில் இந்திய மத்திய அரசு ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருந்தது.

அத்துடன் கொழும்புக்கு கடந்த வருட இறுதியில் விஜயம் செய்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். எம்.கிருஸ்ணா இந்த வீடுகளை நிர்மாணிப்பதற்கான அடிக்கல்லையும் நாட்டியிருந்ததுடன் முதற்கட்டமாக ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்கான காணிகளும் ஒதுக்கப்பட்டிருந்தன.

இந்நிலையிலேயே இவ் விவகாரம் தொடர்பாக இதுவரை இலங்கை அரசாங்கத்துடன் இந்தியா புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை என்று கூறப்படுகிறது.

இரு நாடுகளுக்கும் இடையிலான இந்த ஒப்பந்தம் விரைவில் கைச் சாத்திடப்படும் என்று கூறப்படுகின்ற போதிலும் அதற்கான திகதி திட்ட வட்டமாக இதுவரை அறிவிக்கப்படாத காரணத்தினால் இவ் வீட்டு நிர்மாணப் பணிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந–5)

# புலிகளுக்கு ஆயுத விற்பனை செய்ய இயலாதோர் சட்டவிரோத ஆட்கடத்தலில் ஈடுபடுகின்றனர்

## கனேடிய குடிவரவு அமைச்சர் தெரிவிப்பு

(ரொரன்டோ)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்களை விற்பனை செய்ய முடியாத வர்த்தகர்கள் தற்போது சட்டவி ரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கனேடிய குடிவரவு அமைச்சர் ஜேசன் கென்னி தெரிவித்துள்ளார்.

தென்கிழக்கு ஆசிய வலய நாடுகளைச் சேர்ந்த கும்பல்களே இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தென்கிழக்கு ஆசியாவில் இயங்கி வரும் வலுவான ஓர் கடத்தல் கும்பலினால் எம்.வி.சன் சீ கப்பல் பயணிகள் கனடாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்க வேண்டும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

எம்.வீ.சன் சீ கப்பலின் மூலமாக கனடாவை அடைந்த 32 பேருக்கு தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்பு காணப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். கனேடிய அதிகாரிகளினால் நடத்திய விசாரணைகளின் மூலம் இந்த விடயங்கள் தெரியவந்துள்ளது.

கனடாவை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை முற்று முழுதாக கட்டுப்படுத்த சகல வழிகளிலும் முயற்சி மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

தென் கிழக்கு ஆசிய நாடுகளில் சுமார் 45 க்கும் மேற்பட்ட சட்டவிரோத ஆட்கடத்தல் கும்பல்கள் செயற்பட்டு வருவதாகவும் சட்டவிரோத ஆட்கடத்தல்கா்ரர்கள் நபர் ஒருவரிடமிருந்து 20 ஆயிரம் முதல் 30 ஆயிரம் டொலர் வரையில் அறவீடு செய்வதாகவும் இதில் பத்து வீதம் முதலில் அறவீடு செய்யப்படுவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஸ்ரீ–2)

# ஜனசெவன தேசிய வீடமைப்புத்திட்டம் ஜனாதிபதி தலைமையில் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் 10 இலட்சம் வீடுகளை அமைக்கும் ஜன செவன தேசிய வீடமைப்புத் திட்டத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று கொழும்பில் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் முதற் கட்டமாக இவ் வருடத்தில் 60 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளதாக வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

மகிந்த சிந்தனை தொலைநோக்கில் வீடற்ற அனைவருக்கும் வீடொன்றை வழங்கும் திட்டத்திற்கமைய இந்த ஜன செவன திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இது தொடர்பான வைபவம் கிருலப்பனை பேஸ்லைன் வீதியில் மிஹிது புரவில் நடைபெறவுள்ளது.

மிஹிதுபுர மாடி வீடமைப்புத் திட்டத்தில் 650 வீடுகள் நிர்மாணிக்கப்படும். இரு வருடங்களில் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஜனசெவன திட்டத்தின் கீழ் அரச ஊழியர்களுக்கு 20 ஆயிரம் வீடுகளும் படையினருக்கு 500 வீடுகளும் தோட்ட, மீன்பிடி, சமுர்த்தி, வெளிநாட்டு வேலை வாய்ப்பு என்பவற்றில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு 8 ஆயிரம் வீடுகளும் வறிய குடும்பங்களுக்கு 2 ஆயிரம் வீடுகளும் நிர்மாணிக்கப்படவுள்ளன.

சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் மாடி வீடமைப்புத் திட்டங்கள் ஒவ்வொன்று வீதம் நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்தது. (ஸ்ரீ–2)

## மெய்வல்லுநர் போட்டிகள்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பி.ப. 1.30 மணியளவில் தீருவில் இளைஞர் விளையாட்டு மைதானத்தில் ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வல்வெட்டித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் சி.ஸ்ரீகாந்தன் கலந்து கொள்ளவுள்ளார். (ஸ்ரீ–3–63)

★ ★ ★

(அல்வாய்)

கட்டைவேலி மெ.மி.த.க. பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு பாடசாலை அதிபர் சோ.புஸ்பாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற பிரதேச சபைச் செயலாளர் ச.சந்திரயோகன், ஓய்வு பெற்ற அதிபர் செல்வி பா.கந்தசாமி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ–3–19)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



ஒருவனுடைய உடல், உள்ளம் ஆகியவற்றின் இயல்புகள் பரம்பரையாக வருவது என்று காரணம் காட்டப்படுகிறது. அல்லவா?

வாழ்க்கையில் இரண்டு இணை கோடுகள் உள்ளன – ஒன்று மனத்தைப் பற்றியது. இன்னொன்று சடப்பொருளைப் பற்றியது. சடப்பொருளும் அதன் மாற்றங்களும் மட்டுமே நமது இப்போதைய நிலையை விளக்கி விடும் என்றால் ஆன்மா என்ற ஒன்று இருக்கிறது என்று கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் சடத்திலிருந்து எண்ணம் தோன்றியது என்று நிரூபிக்க முடியாது. தத்துவப்படி, ஒரே ஒரு பொருள்தான் இருக்க முடியுமானால் ஆன்மா ஒன்றே ஒன்றுதான் இருக்க வேண்டும் என்பதைப் போல பகுத்தறிவுக்குப் பொருந்தியதே. ஆனால் இவை எதுவும் இப்போது நமக்கு அவசியமில்லை.

# அதிர்ச்சி அணிகள்

உலகக் கிண்ணத் தொடரில் நியூசிலாந்து, சிம்பாவே, பங்களாதேஷ் ஆகிய அணிகள் மிகப்பெரிய அளவில் சாதனை எதுவும் படைக்கவில்லை.

ஆனால், பல அணிகளின் முன்னேற்றத்தை தடுத்த அணிகளாக இவை உள்ளன.

பல முறை இந்திய அணிக்கு இந்த அணிகள் தடையாக இருந் ததால் முக்கிய போட்டிகளில் இந்திய அணி பங்கேற்க முடியாத நிலை கூட உருவாகி இருக்கிறது.

## நியூசிலாந்து அணி



அணித்தலைவர்
டானியல் விக்டோரி
2007-2011

| | |
|---|---|
| ஆட்டம் | -32 |
| வெற்றி | -06 |
| தோல்வி | -16 |
| முடிவு தெரியாதவை | -10 |

பலம்
ஜோன்ரைட்
பலவீனம்
ஒட்டுமொத்த அணியும்

அதிரடிக்கு



குப்தில்

மிரட்டலுக்கு



மக்குலம்

சுழலுக்கு



வில்லியம்ஸன்

வேகத்திற்கு



பிராங்க்லின்

ஒரு காலத்தில் நியூசிலாந்து பலம்பொருந்திய அணி. அவுஸ்திரேலிய, தென்னாபிரிக்க அணிகளை ஓடோட விரட்டிய அணி. மிரட்டல் ஆட்டம், போராடும் குணம் எல்லாமே உண்டு. சமீபகாலமாக எவ்வளவு அடித்தாலும் தாங்குவோம் என்பதுபோல் எந்த நாட்டுடன் விளையாடினாலும், ஏன் பங்களாதேஷிடம் கூடச் சென்று அடிவாங்கிய அணி.

அதனால் நொந்துபோய்க் கிடக்கிறது. நிமிர்த்திவிட வந்திருக்கிறார் பயிற்றுவிப்பாளர் ஜோன் ரைட். அதுவோன்றுதான் புதிது.

இந்திய மைதானங்களை நன்கு அறிந்தவர் ஜோன் ரைட். வெற்றி ரசகசியத்தை அறிந்தவர். கங்குலி தலைமையிலான இந்திய அணியை 2003 உலகக் கிண்ண இறுதிப் போட்டிவரை அழைத்துச் சென்றவர்.

தொடர் தோல்வியால் துவண்டு கிடக்கும் நியூசிலாந்து அணியை உலகக் கிண்ணத் தொடரில் சரி செய்வாரா?

## சிம்பாவே அணி



அணித்தலைவர்
சிக்கும்புரா
2010-2011

| | |
|---|---|
| ஆட்டம் | -11 |
| வெற்றி | -08 |
| தோல்வி | -03 |

பலம்
பந்துவீச்சு, களத்தடுப்பு
பலவீனம்
குறிப்பிட்ட வெற்றி இல்லை

மிரட்டலுக்கு



கிரீமர்

அதிரடிக்கு



மடகட்ஷா

சரவெடிக்கு



கொவென்ரி

சுழலுக்கு



பிரைஸ்

வேகத்திற்கு



ம்போபு

சிக்கும்புரா, அணித்தலைவராக சமீபத்தில்தான் பதவியேற்றார். சிம்பாவே அணியில் திறமையான இளம் வீரர்கள் உள்ளனர். ஆனால் உலகக்கிண்ண தொடரில் மட்டும் ஆதிக்கம் செலுத்த முடியவில்லை. இருப்பினும் அனைத்து அணிகளுக்கும் அதிர்ச்சியளிக்கும். அது உறுதி. காவெண்டதி இருக்கிறார். மசகட்சா அதிரடி காட்டுவார். பந்து வீச்சு, களத்தடுப்பிலும் கடைசி வரை போராடுவது உறுதி.

ஓர் ஆய்வு

## பங்களாதேஷ் அணி



அணித்தலைவர்
சகிப் அல் ஹசன்
2010-2011

| | |
|---|---|
| ஆட்டம் | -04 |
| வெற்றி | -03 |
| தோல்வி | -01 |

பலம்
அதிரடி சகலதுறை வீரர்கள்
பலவீனம்
துடுப்பாட்ட வீரர்கள் பற்றாக் குறை

மிரட்டலுக்கு



நபீஸ்

அதிரடிக்கு



அஷ்ரபுல்

சரவெடிக்கு



மமுதுல்லா

சுழலுக்கு



இஸ்லாம்

வேகத்திற்கு



ஹுசைன்

பல அதிர்ச்சிகளை பல அணிகளுக்கு வழங்கிய அணி. குறிப்பாக இந்தியா கடந்த உலகக்கிண்ணத் தொடரில் முதல் சுற்றிலேயே வெளிவரக் காரணமாக இருந்த அணி. தற்போது இந்த உலகக்கிண்ணத் தொடரிலும் முதல் ஆட்டத்தில் இந்திய அணியை எதிர்கொள்கிறது. சாதிக்கத் துடிக்கிறது. போட்டி சொந்த மண்ணில் நடப்பதால் அஷ்டபுல், மொகமத்துல்லா, அணித் தலைவர் சகிப் அல்ஹசன் எல்லோரும் சிறப்பாக ஆடினால் வெற்றி உறுதி. ஆனால் உலகக்கிண்ணம் எட்டுமா?

# கடைசி உலகக் கிண்ண தொடரில் ஆடும் வீரர்கள்



**பிரெட் லீ**
**(அவுஸ்திரேலியா)**

புயல் வேகப்பந்து வீச்சாளர் 35 வயதான பிரெட்லி, காயம் காரணமாக உலகக் கிண்ணத் தொடருக்கான அவுஸ்திரேலிய அணியில் இடம்பெறுவரா என்ற சந்தேகம் நிலவியது. ஆனால் காயத்திலிருந்து தேறி தனது இடத்தை உறுதிப்படுத்தி விட்டார்.



**போல் கொலிங் வூட்**
**(இங்கிலாந்து)**

'இருபது-20' உலகக் கிண்ணத்தை இங்கிலாந்து அணிக்கு வென்று தந்த 34 வயதான போல் கொலிங் வூட் துடுப்பாட்ட வீரர் மட்டுமன்றி, மிதவேகப் பந்துவீச்சாளரும் கூட.

ஒரு நாள் போட்டி உலகக் கிண்ணத்தை இங்கிலாந்து அணி இதுவரை கைப்பற்றிய தில்லை என்ற விதியை முறியடிக்க, அவருக்கு கிடைத்துள்ள கடைசி வாய்ப்பு இது தான்.



**சொகைப் அக்தர்**
**(பாகிஸ்தான்)**

உலகக் கிண்ண அதிவேகப்பந்து வீச்சாளர்களின் ஒருவர், அக்தர். காயத்தினாலும் ஒழுங்கீனமான நடவடிக்கையாலும் அவரது கிரிக்கெட் வாழ்க்கை முடிந்து விட்டதாக நினைத்த சமயத்தில், பழைய நிலைக்குத் திரும்பி ஒருவழியாக பாகிஸ்தான் அணியில் இடம்பிடித்துள்ளார்.

35 வயதான அக்தருக்கு இது தான் கடை உலகக் கிண்ணத் தொடர் என்பதில் சந்தேகம் இல்லை. 2003ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் மணிக்கு 161 கிலோ மீற்றர் வேகம் வரை பந்து வீசிய அக்தர் இம் முறை பந்து வீச்சு வேகத்தை குறைத்தாலும் எதிரணிக்கு அச்சுறுத்தலாகவே இருப்பார்.



**ஸ்கொட் ஸ்ரைரிஸ்**
**(நியூசிலாந்து)**

35 வயதான ஸ்கொட் ஸ்ரைரிஸ் சிறந்த சகல துறைவீரர். உலகக் கிண்ணத் தொடரில் அவரின் சாதனைகள் சிறப்பாகவுள்ளன. 18 ஆட்டங்களில்விளையாடி 69.2 சராசரி என்ற கணக்கில் துடுப்பாட்டத்தில் சாதித்துள்ளார். ஸ்ரைரின் அனுபவம் நிச்சயம் நியூ சிலாந்து அணிக்கு உதவிக்கரமாக இருக்கும்.



**ஸ்டீவ் ரிகோலா**
**(கென்யா)**

35 வயதான கென்ய அணித்தலைவர் ரிகோலாவுக்கு இது 5வது உலகக் கிண்ணத் தொடர். அவரது தலைமையில் தான் 2003 ஆம் ஆண்டுகென்ய அணி அரை இறுதி வரை முன்னேறி ஆச்சரியப்பட வைத்தது. தனது கடைசி உலகக் கிண்ணத் தொடரில் விளையாடும் ரிகோலா இந்த முறையும் சில அதிர்ச்சித் தாக்குதலை தொடுக்கும் வியூ கங்களை அமைத்து வருகிறார்.

(தொடரும்)

# உலகக் கிண்ணப் பயிற்சி ஆட்டம்
# அவுஸ்திரேலியா மீண்டும் தோல்வி



(பெங்களூர்)

உலகக் கிண்ணப் பயிற்சிப் போட்டியில் அவுஸ்திரேலிய அணி தென்னாபிரிக்க அணியிடம் 07 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பமாகிறது. இதற்கு முன்னதாக பயிற்சிப் போட்டிகள் நடக்கின்றன. நேற்று பெங்களூரில் நடந்த போட்டியில் நடப்புச் சம்பியன் அவுஸ்திரேலிய- தென்னாபிரிக்க அணிகள் மோதின. இதில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி திணறல் ஆரம்பம் கண்டது. வோட்ஷன் (0), ஹடின் (0) வந்த வேகத்தில் வெளியேறினர். பின் அணித்தலைவர் பொன்டிங் (55), மைக்கல் கிளார்க் (73) இணைந்து படு நிதானமாக ஆடினர். மற்றவர்கள் சோபிக்கத் தவற, அவுஸ்திரேலிய அணி 47.1 ஓவரில் 217 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

சுலப இலக்கை விரட்டிய தென்னாபிரிக்க அணிக்கு அணித்தலைவர் சிமித் (65), அம்லா (60) கைகொடுத்தனர். அடுத்துவந்த டுமினி (47), டி வில்லியர்ஸ் (16) அசத்த, 44.2 ஓவரில் 03 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 218 ஓட்டங்களை எடுத்து அபார வெற்றிபெற்றது.

பயிற்சிப் போட்டியில் ஏற்கெனவே இந்தியாவிடம் வீழ்ந்த அவுஸ்திரேலிய அணி தொடர்ந்து இரண்டாவது தோல்வியைச் சந்தித்துள்ளது.

**இலங்கை வெற்றி**

கொழும்பில் நடந்த மற்றொரு பயிற்சிப் போட்டியில் இலங்கை அணி மேற்கிந்தியத் தீவுகள் அணியை 04 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வென்றது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு ஹயில் (58), பிராவோ (54), சர்வான் (39) கைகொடுத்தனர். 50 ஓவரில் 281 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

சவாலான இலக்கை விரட்டித் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி பொறுப்பாக ஆடியது. டில்சான் (62),



அணித்தலைவர் சங்கக்கார (71), சமரவீர (55) அதிரடியாக ஆட 47.3 ஓவரில் 06 விக்கெட்டுக்களையிழந்து 282 ஓட்டங்களைஎடுத்து வெற்றி பெற்றது.

**பாகிஸ்தான் அபாரம்**

மிர்பூரில் நடந்த பயிற்சிப் போட்டியில் பாகிஸ்தான் அணி பங்களாதேஷ் அணியை 89 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான்அணிக்குஅகமதுஷெஹசாத் (103), மிஸ்பா உல்ஹக் (100) சதமடித்துக் கைகொடுத்தனர். அப்ரிடி (14)ஏமாற்றினார். பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் 09 விக்கெட் இழப்பிற்கு 285 ஓட்டங்கள் எடுத்தது. பின் களமிறங்கிய பங்களாதேஷ் அணி 41.4 ஓவர்களில் 196 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையுமிழந்து தோல்வியடைந்தது.

## இன்றைய பயிற்சி ஆட்டங்கள்

**கனடா எதிர் இங்கிலாந்து**

நேரம்:-காலை 9.30 மணி

**இந்தியா எதிர் நியூசிலாந்து**

நேரம்: மாலை 2.30 மணி

மைதானம்: சென்னை

# மனரீதியாக இந்தியா தயாராகவில்லை
## தோனி சொல்கிறார்

(பெங்களூர்)



பெங்களூரில் நடந்த அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் இந்திய அணி அதிக ஓட்டங்கள் குவிக்கவில்லை. இது தொடர்பாக அணித்தலைவர் தோனி கூறியதாவது,

மனரீதியாக இந்திய வீரர்கள் சரியாகவில்லை. உலகக் கிண்ணத் தொடருக்கு ஏற்ற மனநிலையை வீரர்கள் உருவாக்கிக் கொள்ளவில்லை. இதனால்தான் பொங்களூர் ஆட்டத்தில் அதிக ஓட்டங்கள் குவிக்க முடியவில்லை.

பயிற்சி ஆட்டங்களும் முக்கியம்தான். அதிலும் சிறப்பாக விளையாட வேண்டும். அதற்கு மனரீதியான பலம் முக்கியம். அந்தப் பலம் இருந்தால் தான் களத்தில் சிறப்பாகச் செயற்பட முடியும்.

ஒரு வருடத்தில் 35 ஒருநாள் போட்டி, 10 டெஸ்ட், 45 ஐ.பி.எல். போட்டி மற்றும் சம்பியன் லீக் போன்ற போட்டிகளில் விளையாடினாலும் மனரீதியான பலம் உலகக்கிண்ணத் தொடருக்கு முக்கியம் எனத் தோனி குறிப்பிட்டார்.

# புனர்வாழ்வு முகாம்களில்...

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இப் பிரிவுகளில் குண்டுத்தாக்குதல் நடத்தியவர்கள், முக்கிய பிரமுகர்களைப் படுகொலை செய்தவர்கள், குண்டுகள், வெடிபொருட்கள் மற்றும் ஆயுதங்களைக் கொண்டு சென்றவர்கள், படை முகாம்களின் மீது தாக்குதல் நடத்தியவர்கள், கடற்படைப் படகுகள் மீது தாக்குதல் நடத்தியவர்கள், படையினரின் படுகொலைகளில் சம்பந்தப்பட்டவர்கள், விடுதலைப் புலிகளின் பிராந்தியத் தலைவர்களாக இருந்தவர்கள், தற்கொலைப் படை உறுப்பினர்கள் என்று 352பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் புனர்வாழ்வு முகாம்களில் தனியாகத் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைகள் செய்யப்பட்டு வருகின்ற அதேவேளை, புனர்வாழ்வில் இருக்கும் மற்றொரு தொகுதிப் போராளிகள் மீதான விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன.

இவ் விசாரணைகளில் பொலிஸின் குற்றப் புலனாய்வுப் பிரிவு, தீவிரவாத முறியடிப்பு பிரிவு, தேசிய புலனாய்வுப் பிரிவு, பொலிஸ் விசாரணைப் பிரிவு, ஆயுதப் படைகளின் புலனாய்வு அதிகாரிகள் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-5)

# தென் சூடானில் நடந்...

விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்தே பேராசிரியர் ரஜீவ விஜேயசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் இவ் விவகாரம் குறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது,

சூடானினதும்-இலங்கையினதும் வரலாற்றுப் பின்னணியும் அரசியல் கோட்பாடுகளும் வேறுபாடானவை. சூடானின் நிலைமை முற்றிலும் வித்தியாசமானது.

அங்கு சில பிரதேசங்கள் சூடானின் அரசாங்கத்தின் நிர்வாகத்திலுமில்லை-அதற்கான விநியோகங்கள் இடம்பெறுவதில்லை. ஆனால் இலங்கையில் நிலைமைகள் அவ்வாறில்லை.

விடுதலைப்புலிகளுடனான போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில் கூட எல்லா மாகாணங்களுக்கும் அரசாங்கத்தின் சேவைகள் வழங்கப்பட்டன.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் குறிப்பிட்ட சில பிரதேசங்கள் இருந்த போதும் கல்வி, சுகாதாரம் என்று அடிப்படை சேவைகள் அனைத்தையும் அரசாங்கமே வழங்கியதுடன் இப் பகுதிகளில் பணியாற்றிய அரச ஊழியர்களுக்கும் அரசாங்கமே சம்பளம் வழங்கியது. ஆனால் சூடானில் இத்தகைய நிலைமை இல்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சூடான்போன்று பிரிந்து செல்லும் உரிமைக்காக ஈழத்தமிழ் மக்களின் மத்தியிலும் ஐக்கிய நாடுகள் சபை வாக்கெடுப்பு நடத்துமா என ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம் அக்ற நவ் அமைப்பின் சார்பில் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

லண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் மனித உரிமைகளை பாதுகாத்தலும், 21ஆம் நூற்றாண்டில் ஐக்கிய நாடுகள் சபையும் என்ற தலைப்பில் இம்மாத ஆரம்பத்தில் உரையாற்றியிருந்தார். இவரின் உரையைத் தொடர்ந்து இடம்பெற்ற கேள்வி நேரத்தின் போதே பான் கீ மூனிடம் இக் கேள்வி எழுப்பப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## மெய்வல்லுநர் போட்டி

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன் கிழமை பி.ப.1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் திரு சு. புண்ணியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப்பணிப்பாளர் வைரமுத்து ஸ்ரீஸ்கந்தராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ்.யூனியன் கல்லூரியின் முன்னைநாள் அதிபர் பொ.கமலநாதன் கலந்துகொள்கிறார். (ந-5)

## தனிமையிலிருந்த வயோதிபர் சடலமாக மீட்பு

(கரவெட்டி)

சாவகச்சேரி கச்சாய் தெற்கில் தனிமையிலிருந்த வயோதிபர் ஒருவர் நேற்று முன்தினம் அவரது வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் வைத்திலிங்கம் அமிர்தலிங்கம் (வயது 55) என அடையாளம் காணப்பட்டுள்ளது.

பிரஸ்தாப வயோதிபரின் சடலத்தில் அடிகாயங்கள் உள்ளதாக விசாரணைகளின்போது பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரி பதில் நீதவான் கே.கணபதிப்பிள்ளை, பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ந-5,24)

## கௌரவிப்பு விழா

(காரைநகர்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க காரைநகர் பிரிவுத் தொண்டர்கள் கௌரவிப்பு விழா இன்று புதன் கிழமை காலை 10 மணிக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க காரைநகர் பிரிவுத் தலைவர் சோ.விக்னேஸ்வரன் தலைமையில் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகாவித்தியாலய நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளைத் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் இ.ச.பேரம்பலம் நாகரத்தினம், இலங்கை செஞ்சிலுவைச் சங்க ஆளுநர் சபை உறுப்பினர்கள், தொண்டர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். (ந-5)

# 112 பேரை வளைத்துப் பிடித்...

வடமராட்சி கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டு வருவதுடன் வடமராட்சி மீனவர்களினால் கடலில் விரிக்கப்படும்வலைகளைசேதப்படுத்தியும் வந்தனர்.

இது தொடர்பில் பல்வேறு மட்டங்களுக்கும் வடமராட்சி மீனவர்கள் தெரியப்படுத்தியும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

அத்துடன் தமிழக மீனவர்கள் குடாநாட்டுக் கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடியில் ஈடுபட்டு வருவது குறித்து யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் சமாசங்களின் சார்பில் குழு ஒன்று தமிழகம் சென்று பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது.

எனினும் தமிழக மீனவர்களின் அத்துமீறல் நடவடிக்கை நீடித்து வந்தது.

இந்நிலையில்வடமராட்சிதொண்டைமானாறு முதல் நாகர்கோயில் வரையான கடற்பரப்பில் நேற்று மாலை 3.00 மணியளவில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட தமிழக மீனவர்களை, வடமராட்சி மீனவர்கள் ஒன்றிணைந்து படகுகளில் சென்று பிடித்துவந்தனர்.

சுமார் 30 படகுகளில் சென்ற நூற்றுக்கும் மேற்பட்ட வடமராட்சி மீனவர்கள் இரவு 7.00 மணிவரை 112 தமிழக மீனவர்களைப் பிடித்து பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

தமிழகம் நாகபட்டினத்தைச் சேர்ந்த குறித்த 112 மீனவர்களும் 18 இழுவைப் படகுகளில் வந்து மீன்பிடியில் ஈடுபட்டனர்.

இழுவைப் படகுகளும் பருத்தித்துறை முனைக் கடற்கரைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

இச் சம்பவம் இடம்பெற்ற பருத்தித்துறை முனைப் பகுதிக்குச் சென்ற பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

இவ்வாறு தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டது அடையாள நடவடிக்கை மட்டும்தான். கைது செய்யப்பட்ட அனைவருக்கும் சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு விரைவில் அவர்களின் இடங்களுக்கு அனுப்பிவைக்கப்படுவர் எனவும் தெரிவித்துள்ளார்.

(ந-5,19,24,10)





# பேச்சுவார்த்தை குறித்து ஆலோசிக்க கூட்டமைப்பினர் சென்னையில் கூடுவர்

(கொழும்பு)

**அரசாங்கத்தின் பிரதிநிதிகளுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்திவரும் பேச்சுவார்த்தைகள் குறித்து சென்னையில் தற்போது தங்கியுள்ள கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் ஆலோசனை நடத்துவதற்காக அக்கட்சியின் தலைவர்கள் சிலர் விரைவில் சென்னை செல்லத் தீர்மானித்துள்ளனர்.**

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது, இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம், காணாமல் போனவர்களுடைய பிரச்சினை, அரசியல் கைதிகளின் விடுதலை என்பன தொடர்பாக அரசாங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் இதுவரை இரு சந்திப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

இந் நிலையில் அரசாங்கத்தின் பிரதிநிதிகளுடனான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மூன்றாம் கட்டப் பேச்சுவார்த்தை அடுத்த மாத ஆரம்பத்தில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந் நிலையில் இப் பேச்சுவார்த்தைகள் தொடர்பில் சென்னையில் தற்போது தங்கியுள்ள கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் ஆலோசனை நடத்துவதற்காக அக்கட்சியின் தலைவர்கள் சிலர் விரைவில் சென்னை செல்லத் தீர்மானித்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர்செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

சென்னைக்கு தனிப்பட்ட விஜயம் ஒன்றைக் கடந்தவாரம் மேற்கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் இவ்வாரம் யாழ்ப்பாணம் திரும்பவிருந்த போதிலும் இச் சந்திப்புக் காரணமாக அவர் தொடர்ந்தும் சென்னையில் தங்கியிருப்பார் எனவும் தெரிய வருகின்றது.

இதேவேளை இருதய சத்திர சிகிச்சையின் பின்னர் சென்னையில் தற்போது ஓய்வெடுத்து வரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இச் சந்திப்பை அடுத்து விரைவில் கொழும்பு திரும்புவார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தலைமையிலான குழு ஒன்றை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷநியமித்திருந்தார். இக்குழுவில் அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா சுரேஸ் பிரேமச்சந்திரன், சுமந்திரன் ஆகியோர் அரசாங்கத்தின் பிரதிநிதிகளுடனான பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-[illegible])

## பிள்ளையார் சிலை களவாடப்பட்டது

(நவாலி)

ஆனைக்கோட்டை சம்பந்தப் பிள்ளையார் கோயில் நேற்று நண்பகல் கொடிக் கம்பத்திற்கு முன்பாகவுள்ள மூலாதாரப் பிள்ளையார் விக்கிரகம் திருடப்பட்டுள்ளது.

ஆனைக்கோட்டை சம்பந்தப் பிள்ளையார் கோயிலில் நேற்று பிற்பகல் சென்ற பக்தர்கள் கொடிக் கம்பத்திற்கு முன்பாகவுள்ள மூலாதாரப்பிள்ளையார்விக்கிரகத்தைக் காணவில்லை என ஆலய நிர்வாகத்திற்குத் தெரிவித்தனர்.

இந்நிலையில் நேற்று நண்பகல் ஆலய சூழலில் வெள்ளைவான் ஒன்று காணப்பட்டதாக அயலவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸில் ஆலய நிர்வாகத்தினர் முறைப்பாடு செய்துள்ளனர். (ந-2[illegible])

## ஈழத்தமிழரின் உரிமைக்கு ஆதர...

மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் வழங்கிய செவ்வியின் சாரம் வருமாறு,

**கேள்வி:- அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்யும் உத்தேசம் ஏதும் உண்டா?**

பதில்:-கடந்த வருடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்பின் பின்னர் இலங்கை விஜயம் பற்றிக் கலந்துரையாடப்பட்டது. எனினும் விஜயம் செய்யும் திகதி தொடர்பான இறுதி முடிவு இன்னமும் எடுக்கப் படவில்லை.

**கேள்வி:-இலங்கையின் பல அரசியல் கட்சிகளால் நீங்கள் விடுதலைப் புலி ஆதரவாளர் என்றே பார்க்கப்படுகிறீர்கள். போரின் போது அந்த அபிப்பிராயமே இருந்தது. தற்போது விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டு போர் முடிபுக்கு வந்துள்ளது. நீங்கள் இப்போது இலங்கையுடன் காத்திரமான உறவுகளைக் கட்டியெழுப்ப முனைவதானது விடுதலைப் புலி ஆதரவாளர் என்ற உங்கள் அபிப்பிராயத்தில் உடைவை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கிறீர்களா?**

பதில்:-எனது முன்னுரிமைப் பட்டியலில் இலங்கைக்கு எப்போதும் முதலிடம் உண்டு. நான் உண்மையில் இலங்கைக்கு ஆதரவான ஒருவன். அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகள் இருவராலும் தான் சமாதானப் பேச்சுவார்த்தையில் வழிநடத்துநராக பணிபுரிய கேட்கப்பட்டோம். இரண்டு தரப்பினருமே நீண்டகாலமாக நோர்வே இந்தப் பணியை ஆற்ற வேண்டும், என்று கேட்டுக் கொண்ட காரணத்திற்காகவே அதனை நாம் ஏற்றுக் கொண்டோம்.

இலங்கையின் எல்லா மக்கள் பிரிவினருடனும் எமக்கு நல்லுறவு இருந்தமை, அவர்கள் அவ்வாறு கேட்கக் காரணமாக இருந்திருக்கிறது என்று நான் நினைக்கிறேன். நான் ஒரு பக்கத்திற்குச் சார்பானவன் என்ற விமர்சனத்தை விக்கிலீக்ஸ் வெளிப்படுத்திய ஒரு குறிப்பு முற்றிலுமாக நிராகரித்திருக்கிறது என்றே நான் நினைக்கிறேன்.

**கேள்வி:-வெளிநாடுகளில் புலம்பெயர்ந்த தமிழர்கள் மிகுந்த செயலூக்கத்துடன் இருக்கிறார்கள். அவர்கள் தற்போதும் இலங்கையில் ஒரு தனிநாட்டுக்கான முயற்சியில் ஈடுபட்டுக் கெண்டிருக்கிறார்கள். போர் முடிபடைந்துள்ள இன்றைய நிலையில் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

பதில்:-அவர்களுக்கு நான் சொல்கிற செய்தி ஜனநாயக வழிமுறைகளில் அவர்கள் தங்களது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்பது தான். பேச்சுவார்த்தை அவர்களுடைய கருவியாக வேண்டும். இலங்கையின் ஜனநாயக முறைமைகளுக்குள் அவர்கள் பணிபுரிய வேண்டும் என்பதோடு, போரால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் வாழும் மக்களுடைய இயல்பு வாழ்க்கை மீள் உறுதிப்படுத்தப்படும் விடயங்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பது தான் எனது ஆலோசனையாக இருக்க முடியும்.

தமிழ் மக்களுடைய சட்டரீதியான உரிமைகளுக்கு உறுதியான ஆதரவு உண்டு. ஆனால் தனித்த ஒரு தமிழ் அரசுக்கு எவ்விதசர் வதேச ஆதரவும் இல்லை. நாங்களும் கூட பேச்சுவார்த்தையைத் தொடருமாறு இலங்கை அரசை ஊக்குவிப்போம். தற்போது போர் முடிந்துவிட்டது. இப்போது முக்கியத்துவம் பெற வேண்டியது பேச்சுவார்த்தையும் நல்லிணக்கமும்தான்.

**கேள்வி:-நீங்கள் நினைக்கிறீர்கள் போர் வேறு வகையில் முடிபடைந்திருக்கலாமென்று.** ***(குறிப்பாக போரின் இறுதிக்கட்டத்தில் பெருமளவில் ஏற்பட்ட மனித உயிரிழப்புக்களைக் குறைக்கும் வகையில்)***

பதில்:-இறுதிக்கட்ட யுத்தத்தை நினைத்துப் பார்த்தால் அது மிகுந்த வலி நிரம்பியதாக உள்ளது. பெருமளவிலான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

எந்தப் போரிலும் இரண்டு தரப்பினர் இருப்பார்கள். ஆக போரில் ஏற்பட்ட உயிரிழப்புக்களுக்கு இரண்டு தரப்பினரும் பொறுப்பேற்க வேண்டும். எவ்வாறாயினும் இத்தகைய விளைவைத் தவிர்க்க முடியாததாயின் விடுதலைப் புலிகள் வேறு வழிமுறையைத் தேர்ந்தெடுப்பார்கள் என்று நான் நம்பியிருந்தேன். அது தான் அவர்களுக்கான என்னுடைய பிரதானமான ஆலோசனையாகவும் இருந்தது.

**கேள்வி:-போருக்கு பின்னரான இலங்கையில் நோர்வே எத்தகைய பாத்திரத்தை ஆற்றவிருக்கிறது என்று சொல்வீர்களா?**

பதில்:-நோர்வே இலங்கையுடன் தனிப்பட்ட உறவுகளைக் கொண்டுள்ளது. ஆனால் எத்தகைய விசேட பாத்திரமும் இல்லை. புலம்பெயர்ந்த தமிழ் சமூகத்தினர் உட்பட இலங்கை மக்களுக்கும் அரசாங்கத்திற்குமிடையேயான பேச்சுவார்த்தையில் ஒரு ஆக்கபூர்வமான பங்காளியாக செயற்பட நோர்வே விரும்புகிறது.

நோர்வேயும் இலங்கையும் சிறந்த இருபக்க உறவுகளைக் கொண்டுள்ளன. இலங்கையின் அபிவிருத்தியில் இணைந்து கொள்வது குறித்து நாம் திட்டமிட்டு வருகிறோம். அத்தோடு மேலதிக தனியார் முதலீடுகளையும் இலங்கையில் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம் என்றார். (ந-5)

## ஜெயபுரத்...

வீதியோர பற்றைக்குள்ளிருந்து 21 குண்டுகளை கண்ணிவெடியகற்றும் பிரிவினர் நேற்று மீட்டனர். இவ்வாறு மீட்கப்பட்ட குண்டுகள் நேற்று மாலை 3.30 மணியளவில் படையினரின் குண்டுசெயலிழக்கச் செய்யும் பிரிவினரால் பாதுகாப்பாக வெடிக்க வைக்கப்பட்டன. இதனால் முறிகண்டி-ஜெயபுரம் வீதி யூடான போக்கு வரத்து ஒரு மணி நேரம் தாமதமானது. (ந-5,84)

## தடுப்புமுகா...

இடம்பெற்றிருந்தனர்.

இந்நிலையில், தடுப்பு முகாம்களில் உள்ள 676 சந்தேக நபர்களையும் புனர்வாழ்வு முகாம்களுக்கு இடம்மாற்றி அவர்களை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இக் குழு பரிந்துரை செய்துள்ளது.

ஓமந்தை தடுப்புமுகாமில் போரின் முடிபில் கைது செய்யப்பட்ட அல்லது சரணடைந்த விடுதலைப்புலி உறுப்பினர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளதுடன், பூசா தடுப்புமுகாமில் நீண்டகாலமாக சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.

ஓமந்தை மற்றும் பூசா தடுப்பு முகாம்களிலுள்ள சந்தேக நபர்களில் அரைவாசிப் பேரின் வழக்குகளை இக் குழு உன்னிப்பாக ஆராய்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலை செய்யுமாறு அல்லது புனர்வாழ்வுக்கு அனுப்புமாறு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள 676 பேரில் 251 பேர் பூசா தடுப்பு முகாமிலும் ஏனையோர் ஓமந்தை தடுப்புமுகாமிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந.ஶ்ரீ.5)


## B.Sc.வெளிவாரி

### காமராசர் பல்கலைக்கழகம் மதுரை

- பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- A/Lல் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் முழுமையான சித்தியடைந்தவர்களும், இரண்டு பாடம் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆகும். பொது வினாவுக்கு உரிய சித்தி அவசியமில்லை.
- விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
- B.Sc இரண்டாம் வருடம் இறுதியாண்டுக்கான விரிவுரைகளும் ஆரம்பமாகிவிட்டன.

குறிப்பு:-

1. B.A இற்குரிய கற்கை நெறியினை மேற்கொள்வதற்கு தமிழ், ஆங்கிலம், அரசியல், பொருளியல், சமூக விஞ்ஞானம், வரலாறு ஆகிய பிரிவுகளில் ஒன்றினைத் தெரிவு செய்யமுடியும்.
2. B.Com கற்கை நெறியினை மேற்கொள்ளமுடியும்.
3. மேற்குறிப்பிட்ட கற்கை நெறியினை மேற்கொள்வதற்கு A/L இல் சகல பிரிவுகளிலும் முழுமையான சித்தியடைந்தவர்களும், இரண்டு பாடம் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

- மேற்குறிப்பிட்ட பாடநெறிகளானது இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.
- பரீட்சைகள் யாவும் புதிய உயர்கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள பரீட்சை மண்டபத்தில் நடைபெறும்.
- B.A தமிழுக்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

யாழ். இணைப்பாளர்கள் காமராசர் பல்கலைக்கழகம்
T.P.: 222 8148

புதிய உயர் கல்லூரி ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-2457)



## காணி விற்பனைக்குண்டு

மானிப்பாய் சந்தியில் இருந்து 100 M தொலைவில் சுந்தர்சன் நிறுவனத்திற்கு அருகில் 2 பரப்புக் காணியும், நாவலி வடக்கு அட்டகிரி பாடசாலை, அட்டகிரி முருகன் கோயிலுக்கு அருகாமையில் 6 பரப்புக் காணி வீட்டுடனும் விற்பனைக்கு உள்ளன. உடன் தொடர்பு கொள்ளவும்.

T.P.: 021 4908147

(3823)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.02.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.